வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

ஏப்ரல் 22 - 28, 2015

பக்கம் 24

விலை 30/-



# வாக்காளர்களை இனிமேலும் மடையராக்க முனையாதீர்!

1717 FOLLOW US

இப் புதுவருட காலத்தில்
சுவையான கதை பேச
சிறந்த IDD கட்டணங்கள்!

இப் புதுவருட பண்டிகைக் காலத்தில் உங்கள் அன்பு உறவுகளுடன் நிதமும் திசையெங்கும் சுவையான கதை பேச சிறந்த IDD கட்டணங்கள்.

இக் கட்டணங்கள் IDD Buddy அழைப்புகளுக்கு செல்லுபடியாகும்.

ரூ. 9.00 | ரூ. 10.00
ரூ. 1.50
ரூ. 8.00 | ரூ. 10.00
ரூ. 14.00
ரூ. 1.20
ரூ. 15.00

அழையுங்கள் 100 <அழைப்பைப் பெறுபவரின் தேசக் குறியீடு> <அழைப்பைப் பெறுபவரின் இல.>

2015 ஏப்ரல் 30 வரை மட்டுமே. நிபந்தனைகள் உண்டு. அரசாங்க வரிகள் மற்றும் தீர்வைகள் உண்டு

Sri Lanka Telecom Mobitel


TRIAD 33012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சோந்தியான பெண்கள்?



மனித உடல்கள் மீது ஓவியங்களைத் தீட்டக்கூடிய ஓவியர் இத்தாலியைச் சேர்ந்த 37 வயது ஜோஹன்னஸ் ஸ்டோட்டர், பெண் மொடல் அழகிகளை வைத்து தவளை, கிளிகள் போன்றவற்றை உருவாக்கி, அசத்தியிருக்கிறார். சமீபத்திய இவருடைய படைப்பு பச்சோந்தி.



இரண்டு பெண்கள் மீது வண்ணங்களைத் தீட்டி, கிளையில் நடந்து செல்லும் பச்சோந்தியைக் கொண்டு வந்திருக்கிறார். இயற்கை மீது எனக்கு ஆர்வம் அதிகம். அதனால்தான் தவளை, பச்சோந்தி என்று வரைகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தங்கமான திருமணம்

புருனேய்(Brunei) நாட்டு மன்னர் தனது மகனின் திருமணத்தை தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையில், ஆடம்பரமாக நடத்தி உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

உலகப் பணக்கார குடும்பங்களில் ஒன்றான புருனேய் நாட்டு மன்னர், தனது 6 வது மகனான அப்துல் மாலிக்(Abdul Malikd31) என்பவருக்கு திருமணம் நிச்சயத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுப் புருனேய் தலைநகரில் உள்ள Istana Nural Iman அரண்மனையில், உலகமே வியக்கும் வகையில் ஆடம்பரமாக அந்தத் திருமணம் நடந்துள்ளது.

தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த விசேஷ நாற்காலிகளை நோக்கி மணமக்கள் நடந்து வருகின்றனர்.

மணமக்கள் இருவரும் அணிந்திருந்த திருமண ஆடைகள், அங்கு கூடியிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

தங்க ஆபரணங்களால் இளவரசரின் ஆடைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

மேலும் வைரம், வைடூரியம், ரத்தினக்கற்கள், உள்ளிட்ட விலைமதிப்பற்ற ஆபரணங்களுடன் மணமகளான Haji Bolkiah(22) அரங்கிற்குள் வந்தார். மணமகள் அணிந்திருந்த வைரத்தால் செதுக்கப்பட்ட காலணிகள், காதணிகள் மற்றும் தங்கக் கொலுசுகள், விருந்தினர்களின் மனதை கொள்ளை அடிக்கும் விதமாக இருந்தன.

இந்தத் திருமணத்தை அந்தநாட்டு மன்னரான Hassanal Bolkiah, தனது மதச்சடங்குகளை உரிய முறையில் பின்பற்றி நடத்தி வைத்தார்.

இதில் மலேசிய நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள், அரேபிய நாட்டு ஆளுனர் உள்ளிட்ட உலக முக்கிய தலைவர்கள் மற்றும் பணக்காரர்கள் பங்கேற்றனர். மேலும் அரண்மனையில் உள்ள சுமார் 1788 அறைகளும் தங்கத்தால் இழைக்கப்பட்டு விருந்தினர்களுக்கு தங்குவதற்காக வசதி செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத குரல்

- பிரம்மன்



மகாபாரதத்தில் பீஷ்மரின் பாத்திரமே மிக முக்கியமானதாகும். பிதாமகனான பீஷ்மர்தான் பல சந்தர்ப்பங்களில் பாண்டவர்களுக்கு நீதி கிடைக்க போராடினார். கௌரவர்கள் பண்டவர்களுக்கு எதிராக நகர்த்தும் ஒவ்வொரு சதி முயற்சிக்கும் அரச சபையில் இருந்து தடைக்கல்லைப் போட்டவர் பீஷ்மர். பீஷ்மரின் சாதுரியமான காய்நகர்த்தல்களாலும் பாண்டவர்களைக் காக்க எடுத்த நடவடிக்கைகளாலும் தான் கடைசிவரை கௌரவர்களின் சதி முயற்சிகள் கைகூடாமல் போயிருந்தன. இல்லாவிட்டால் வனவாசம் செல்லும்போது அல்லது அஞ்ஞானவாச காலத்தின் முடிவிலோ பாண்டவர்களின் கதை முடிந்திருக்கும். போர் தர்மத்துக்கு மாறாக பாண்டவர்களைக் கொல்வது தவறென்று பீஷ்மர் உரத்துக் குரல் கொடுத்ததால் தான் துரியோதனனின் கொலைக்கரங்கள் பண்டவர்களைத் தீண்ட முடியாமல் போயிருந்தது.

இலங்கையில் தமிழர் தரப்பு ஏறக்குறைய பாண்டவர்களின் நிலையில் தான் உள்ளது. எப்படி மகாபாரதத்தில் பாண்டவர்கள் சிறுபான்மையாளர்களாக இருந்தார்களோ, அப்படித்தான் இலங்கையில் தமிழர்களின் நிலை. பூர்வீகக் குடிகளான தமிழர்களை இல்லாதொழிப்பதற்கே பேரினம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. புலிகள் இருந்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான இருள் சூழ்ந்த நாள்களிலும் சரி, தமிழ்மக்களுக்கு பேரின அரசு அநீதி இழைத்தபோதெல்லாம்


**தமிழர் தரப்பில் இலங்கையில் ஏறக்குறைய பாண்டவர்களின் நிலையில் தான் உள்ளது. எப்படி மகாபாரதத்தில் பாண்டவர்கள் சிறுபான்மையாளர்களாக இருந்தார்களோ அப்படித்தான் இலங்கையில் தமிழர்களின் நிலை. பூர்வீகக் குடிகளான தமிழர்களை இல்லாதொழிப்பதற்கே பேரினம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. புலிகள் இருந்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான இருள் சூழ்ந்த நாள்களிலும் சரி தமிழ்மக்களுக்கு பேரின அரசு அநீதி இழைத்தபோதெல்லாம் தவறாமல் ஒரு குரல் நீதிக்காக எழும். தனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்ற நெஞ்சுரத்தோடு எழுகின்ற அந்தக் குரல் சர்வதேசத்தின் காதுகளை இலகுவாக எட்டிவிடுவதால் பேரினவாதிகள் தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்ட நிகழ்வுகள் பல.**




தவறாமல் ஒரு குரல் நீதிக்காக எழும். தனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்ற நெஞ்சுரத்தோடு எழுகின்ற அந்தக் குரல் சர்வதேசத்தின் காதுகளை இலகுவாக எட்டிவிடுவதால் பேரினவாதிகள் தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்ட நிகழ்வுகள் பல.

இப்படி தமிழர்களுக்கு எதிரான கொடூரங்களைக் கண்டித்து இன்றும் துணிச்சலோடு குரல்கொடுக்கின்ற நவீன பீஷ்மர் வேறு யாரும் அல்லர். மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோஷப்பு தான்.

ஒரு சமயத் தலைவரான மன்னார் ஆயர் மற்றவர்களைப் போல தனது செயற்பாடுகளையும் எண்ணங்களையும் மதமென்ற ஒரு கூட்டுக்குள் மட்டும் குறுக்கிக் கொள்ளவில்லை. மாறாக சமூகம் மீதும், இனத்தின் மீதும், மனுக்குலம் மீதும், இயற்கையின் மீதும் தன் கருணையின் பார்வையைப் படரவிட்டார். அதனால்தான் அநீதிகள் நிகழ்கின்ற போதெல்லாம் அதற்கு எதிராகப் பொங்கியெழுந்து அறவழியில் போராடும் தமிழர்களின் பிதாமகனாகப் மாறிப்போனார். போர் நடைபெற்ற காலத்தில் பொருளாதார நெருக்கடிக்குள்ளும், போர்ப் பாதிப்புக்குள்ளும் சிக்கித் தவித்த மக்களுக்கு ஏதோ ஒருவிதத்தில் உதவி செய்வதிலேயே ஆயரின் பெரும் பகுதி கழிந்திருந்தது. அரசியல் உயர் மட்டத் தலைவர்களோடும், ஏனைய தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளோடும் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி கடும் போர்க்காலத்திலும் மக்களுக்கான உணவு விநியோகத்தை சீராக நடத்துவதற்கு ஆயர் நல்கிய பங்களிப்பு மகத்தனாது.

இதைவிட மடுமாதா உள்ளிட்ட பல தேவாயலங்களில் தஞ்சமடைந்த மக்களை எந்த ஒரு ஊறும் நேராமல் காத்த பெருமை மன்னார் ஆயருக்கு உண்டு. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத இடங்களுக்குக்கூட மக்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு துணிந்து சென்றவர் அவர். அதனால்தான் இன்றளவும் மத பேதம் பாராமல் ஈழத்தமிழர்கள் அனைவரும் மன்னார் ஆயரை தங்களது பிதாமகனாகக் கொண்டாடி வருகிறார்கள். மன்னார் ஆயருக்கு இருந்த மக்கள் செல்வாக்கு கடந்த மாகாணசபைத்தேர்தலில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஏனெனில் வடமாகாணசபை தேர்தலுக்கு முன்னதாக கூட்டமைப்புக்குள்ளே பெரும் குழப்ப நிலை தோன்றியிருந்தது.

கூட்டமைப்பைத் தனிக்கட்சியாகப் பதிய வேண்டும் என்று ஒரு சாரார் போர்க்கொடி தூக்கியிருந்தார்கள். இன்னொரு சாராரோ அவ்வாறு பதிய முடியாது என்று திட்ட வட்டமாக ஒற்றைக்காலில் நின்றார்கள். இந்தச் சந்தர்ப்பதில் தேர்தலும் வந்துவிட யாருக்கு எத்தனை ஆசனங்கள் என்ற குழப்பமும் சேர்ந்துகொண்டதால் கூட்டமைப்பு கலங்கிய குட்டையாகிப்போனது.


சரி, இனிமேல் கூட்டமைப்பின் கதை அவ்வளவுதான். தமிழர்களுக்கு இருந்த ஒரே ஒரு அரசியல் தெரிவான கூட்டமைப்பும் சிதைக்கப்பட்டு எங்களது அரசியல் சமநிலை கூறுகளாகப் பிரிக்கப்படப் போகிறதோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருந்தது. கூட்டமைப்பு பிரிந்து விட்டது என்றே பலரும் முடிவெடுத்தனர். இந்த நிலையில்தான் சூழ்நிலையின் முக்கியத்துவம் கருதி இந்தப் பிரச்சினையில் மன்னார் ஆயர் களமிறங்கினார். அதன் பின்னர் மிக விரைவாகவே கலங்கிய குட்டை தெளிந்தது.

கூட்டமைப்புக் காரர்கள் ஒவ்வொருவரும் மன்னார் ஆயரின் சொற்களில் பொதிந்திருந்த உண்மைகளை உணர்ந்து கொண்டார்கள். ஆயரின் பேச்சை மீறுவதென்பது ஒட்டுமொத்த தமிழ்மக்களின் பேச்சை மீறுவதற்கு ஒப்பானதாகும் என்ற உண்மையை கூட்டமைப்பினர் அறிந்து வைத் திருந்ததால் அவரின் பேச்சை அவர்களால் தட்டமுடியவில்லை. ஒருவழியாக ஆயரின் தலையீட்டால் கூட்டமைப்புக்குள் இருந்த பிரச்சினைகள் ஓய்ந்து வடமாகாண சபைக்கான ஆசனப் பதிவு சுமுகமாக முடிந்தது. இதன் பின்னர் வடமாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு வரலாற்று வெற்றிபெற்றதும், தமிழர்களின் ஏகோபித்த அரசியல் சக்தியாக கூட்டமைப்பு சர்வதேசத்தின் முன்னால் 'கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டதும் நிகழ்ந்தேறின. அதற்கு ஆயரின் தலையீடும் மிக முக்கியமான காரணம். தமிழ்மக்களின் பிதாமகனாக மாறி நீதிக்காகக் குரல் கொடுக்கும் ஆயரின் குரலை மௌனிக்கச் செய்யவதில் பேரினம் இறங்கியிருந்தது. ஆனால் ஒருபோதும் அந்தக் குரல் ஓய்ந்ததே இல்லை. ஏழுகடல்கள் தாண்டி எட்டாத வானத்தையும் முட்டியபடி மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பின் நீதிக்கான குரல் எந்த நிலைவந்தாலும் ஓங்கி ஒலித்தபடிதான் இருக்கப்போகிறது. ***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மக்குரலோனின் சில சர்ச்சைகள்



ஜெயகாந்தன்... மேடைக்கேற்ற சிம்மக் குரலும், எழுத்துக்கேற்ற யதார்த்தவாதமும், உண்மையை உரக்கச் சொல்லும் - வீச்சும் இடித்துச் சொல்லும் சொல்லுக்கும் செயலுக்கும் சொந்தக்காரர். அவரின் அருகாமையில் இல்லாவிட்டாலும், அவர் எழுத்தில் இரண்டறக் கலந்து எழுந்து நின்ற எழுத்தாளர்கள் எண்ணிலடங்கார்.

அப்படியானதொரு நிலையில்தான் பத்திரிகை நிருபன் என்ற முறையில் சில சமயங்களில் ஜெயகாந்தனைப் பற்றிய அண்மைவெளிகள் சில எனக்கு வாய்த்தன. சொல்லொன்று செயலொன்று, எழுத்தொன்று என வாழ்ந்த - வாழும் போலித்தனமான புகழ்பாடிக் கூட்ட எழுத்தாளர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் அவர் தம் எழுத்தில் மட்டுமே தரிசனம் பெற்று, அருகில் நெருங்கும் வாய்ப்பு கிடைத்த போதும் கூட அவரின் கிட்டத்தில் நின்று ஒட்டி உறவாட அச்சப்பட்டவர்களில் நானும் ஒருவன்.'

மகாகர்வி... பேச்சிலும், எழுத்திலும், கேள்வியிலும் எதிராளிகளை வளைப்பவர். பத்திரிகை பேட்டி என்று

**'சாயம் விஷம். வாஸ்தவம். ஆனால் சாயம் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. வளர்ச்சியின் வளர்ச்சி. அந்த வளர்ச்சியின் வளர்ச்சி இல்லாவிட்டால் நாம் இங்கே ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்க முடியுமா? நமக்கு இப்படியொரு பொருளாதார வளர்ச்சி வந்திருக்க முடியுமா? எனவே கண்டுபிடிப்புகளை, வளர்ச்சிகளை சாடாதீர்கள். வளர்ச்சியின் வளர்ச்சியினால் வரும் எதிர்வினைகளுக்கு மாற்று வினைகளை எதிர்ப்பதற்கு பதில் அந்த நேரத்தை மாற்று விஞ்ஞானத்தை கண்டுபிடிக்க உதவுங்கள். அதைவிட்டு விட்டு விஞ்ஞானத்தையே கூடாது என்பதும், மறுப்பதும் எப்படி சரியாகும்?'**

சராசரி மனிதர்கள், எழுத்தாளர்கள், பேச்சாள அரசியல்வாதிகளைப் போல இவரை நெருங்கினால் அவன் செத்தான் என்று நண்பர்கள் பேசக் கேட்டிருக்கிறேன். ஆனால் அவரின் தரிசனம் சில இடங்களில் வாய்த்தபோது அந்த சிம்மக்குரலில் தொனித்த யதார்த்தமும், உண்மையும், நேர்மையும், உள்ளத்து உருவை வெளிப்படை காட்டும் பாங்கும், வாழ்ந்தால் இந்த மாமேதையை போலல்லவோ எழுத்தாளர்கள் வாழவேண்டும் என்ற உத்வேகம் பெற்றேன். போலித்தனம் கண்டு முணுக்கென்று கோபப்படும் பாங்கு ஏறத்தாழ அவர் அளித்த பிச்சை என்றே சொல்லுவேன்.

கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்கு முன்பு. ஓர் இலக்கிய விழாவில் கலந்து கொள்ளும் நிமித்தம் திருப்பூரில் ஒரு நட்சத்திர ஓட்டலில் அவர் தங்கியிருந்தார். அவருக்கு நெருக்கமான நண்பர்கள் மட்டும் அறையில். வழக்கமான பாணியில் ஒரு குழாயில் தூள்களை அடைத்து நெருப்பேற்றி ஆளாளுக்கு மாற்றி, மாற்றி புகைத்துக் கொண்டிருந்தார்கள். ஐந்தாறு நண்பர்கள் மாற்றி மாற்றி புகைச் சுற்று வரும் அந்த புகைத் தொடர் ஓட்டத்தில் ஜெயகாந்தனும் கலந்து கொண்டிருந்தார்.

கல்கி பத்திரிகை நிருபன், இளம் எழுத்தாளன் என்ற முறையிலும்

**- கா.சு.வேலாயுதன்**

எழுத்தாளர் நண்பர் சுப்ரபாரதிமணியன் மூலம் எனக்கும் அங்கே அனுமதி கிடைத்தது. எங்கே போனாலும் பேட்டி என்று கையேட்டை தூக்கிவிடும் எனக்கு ஜெயகாந்தனின் அருகாமை கிடைத்தபோது எதுவும் தோன்றவில்லை. அவர்களுக்குள் நடந்த இலக்கிய சம்பாஷணைகளேயே கவனித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு பிரபல எழுத்தாளரின் பெயரைச் சொன்ன ஒரு நண்பர் 'உங்கள் எழுத்தைப் படித்துத்தான் அவர் எழுதிப்பழகியதாக சொல்லியிருக்கிறாரே ஜே.கே?' என்றார். ஜே.கே முகத்தில் பிரதிபலிப்பு தெரியவில்லை. உறுத்த் பார்வை. அதைவிட உறுதியான குரல்.

'அவன் பொய் சொல்றான்!' என்றார் கர்ஜனையுடன். எப்படி? கண்கள் சிவக்க அவரே விளக்கம் சொன்னார்: 'இப்படித்தான் ஒருத்தன் நான் கஞ்சா அடிக்கறதை பார்த்து கஞ்சா அடிச்சுப் பழகினதா சொன்னான். அதை எப்படி ஏத்துக்க முடியும்? என்னிடம் அவரவர்க்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக்கொண்டு, அதை நான் பழக்கி விட்டேன் என்பது போல சொல்கிறார்கள். அதற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்?'.

அவர் பேச்சில் ஒரு துளி செயற்கைத்தனமும் இல்லை.

'ஊரைக்கூட்டி ஒலிக்க அழுதிட்டு பேரை நீக்கி பிணமென்று பேரிட்ட பின், சூரையங்காட்டிடையே சுட்டிட்டு, நீரில் மூழ்கி நினைப்பொழிந்து, அனைவரும் நீங்கிக்கழிந்த பின் அவன் விழித்தான்..! உறங்குவது போலும் சிறுகதையில், இப்படியொரு தொடக்கம் வைத்திருந்தீர்களே. அது எப்படி சாத்தியமானது?' என்று ஒரு கேள்வி.


'நான் எங்கே எழுதினேன்? அது முழுக்க, முழுக்க திருமூலருடைய வார்த்தைகள்!'

உண்மையை, அதையும் உறுதிபட ஒப்புக் கொள்வது... அதுதான் ஜெயகாந்தன்.

இரவு இலக்கிய கூட்டம். அதில், சுப்ரபாரதிமணியனின் சாயத்திரை நாவல்குறித்த அறிமுகம். சாயக்கழிவுகளால் நொய்யல் நதி நஞ்சானது. அதற்கு காரணமான தொழிற்சாலைகளை, தொழில் முதலாளிகளை பற்றி கடுமையாக சாடினர் கூட்டத்தில் பேசியவர்கள்.

ஜெயகாந்தன் பேசுகையில் பேச்சின் நிலை தலைகீழானது. 'சாயம் விஷம். வாஸ்தவம். ஆனால் சாயம் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. வளர்ச்சியின் வளர்ச்சி. அந்த வளர்ச்சியின் வளர்ச்சி இல்லாவிட்டால் நாம் இங்கே ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்க முடியுமா? நமக்கு இப்படியொரு பொருளாதார வளர்ச்சி வந்திருக்க முடியுமா? எனவே கண்டுபிடிப்புகளை, வளர்ச்சிகளை சாடாதீர்கள். வளர்ச்சியின் வளர்ச்சியினால் வரும் எதிர்வினைகளுக்கு மாற்று வினைகளை எதிர்ப்பதற்கு பதில் அந்த நேரத்தை மாற்று விஞ்ஞானத்தை கண்டுபிடிக்க உதவுங்கள். அதைவிட்டு விட்டு விஞ்ஞானத்தையே கூடாது என்பதும், மறுப்பதும் எப்படி சரியாகும்?'

ஆணித்தரமான பேச்சு. தீர்க்க தரிசனப்பார்வை. அதேமேடையில், ஒரு சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் எழுத்தாளர்கள் பற்றி சிலர் பேசியதை இப்படிக் குறிப்பிட்டார். 'சிறுமைதான் தன்னைத்தானே அணிந்து வியந்து கொள்ளும்!' மேடையில் பலர் முகத்தில் ஈயாடவில்லை. அதுதான் ஜெயகாந்தன். எழுத்தும், பேச்சும், செயலும் ஒரேமாதிரி.



அவர் அரசியல் நிலைப்பாடுகளில் பலர் கடுமையான விமர்சனங்கள் வைப்பதுண்டு. ஆனால், அவர் கடைசி வரை தான் வாழ்ந்த கம்யூனிஸத் தத்துவத்தின் மீது உயிர்ப்பாக இருந்தார் என்பது அவரின் நெருக்கமான நண்பர்கள் அறிந்ததே.

நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் ஒருமுறை, 'கம்யூனிஸ்ட் கட்சி தங்களை ஒதுக்கிவிட்டது. உங்கள் அருமை புரியாமல் விலக்கி வைத்துவிட்டது...! என்ற ரீதியில் ஒரு நண்பர் கடுமையாக பேசினார். உடனே சூடாகிப்போனார் ஜெயகாந்தன்.

'கம்யூனிஸ்ட் கட்சி எங்கே என்னை

**(16 ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் பெற முனையும் இருண்ட யுகம்

**- அக்கினிக்குமரன்**



கடந்த புதுவருடப்பிறப்பு நாளை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 27 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 62 பேர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தங்காலையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துள்ளனர்.

இவர்கள் மஹிந்த அவர்களுக்கு புதுவருட வாழ்த்துத் தெரிவிக்கவே அங்கு சென்றதாகக் கூறப்பட்ட போதிலும் கூட, அங்கு மஹிந்த ராஜபக்ஷ அவர்களை நாடாளுமன்ற அரசியலில் கொண்டு வருவது பற்றியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றியும் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன. இந்த விடயம் தொடர்பாக விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன போன்றவர்களின் தலைமையில் பெரும் பேரணிகள் நடத்தப்பட்டு பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அது மட்டுமன்றி, திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க கலந்துகொள்ளும் கூட்டங்களில் கூச்சலிடுவது, குழப்பங்களை விளைவிப்பது போன்ற காடைத்தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் மீள்பிரவேசம் பற்றி நேரடியாக எந்த ஒரு முடிவையும் வெளியிடாவிட்டாலும் கூட இவற்றையெல்லாம் அவரே பின்னணியில் நின்று இயக்கி வருவதாகக் கூறப்படுகிறது. எப்படியிருப்பினும் அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சிப்பீடமேறும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கி விட்டனர் என்பது மட்டும் உண்மை.

அதிகாரத்தில் இருந்தவர்கள் அந்த அதிகாரத்தால் கிடைக்கக் கூடிய போகங்களை அனுபவித்துச் சுகம் கண்டவர்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற நினைப்பது அப்படியொன்றும் புதிய விடயமல்ல. மேலும் அரசியலில் மக்களால் புறமொதுக்கப் பட்டவர்கள் எல்லோருமே அரசியலை விட்டு ஒதுங்கி விடுவதில்லை. ஏதாவது வழிகளில் மீண்டும் அரசியலின் ஆதிக்க உலகுக்குள் புகுந்து கொள்ளவே ஒரு சிலர் பிடிவாதமாக முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

**மஹிந்த சகோதரர்களையும், அவர்களின் ஆதரவாளர்களையும் பொறுத்தவரையில் அவர்கள் மீண்டும் அரசியலுக்குள் வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற முனைவதற்கு சில முக்கிய காரணங்கள் உள்ளன. மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் அவர் மிகவும் ஆக்ரோஷமாக, தனக்கு வாக்களித்த 57 இலட்சம் வாக்காளர்களை என்றுமே கைவிடப்போவதில்லை எனச் சூளுரைத் தமை அவர் அரசியலை விட்டு ஒதுங்கி விடப்போவதில்லை என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தியது. எனினும் அவரை 62 இலட்சம் மக்கள் வீட்டுக்குப் போகும்படி ஆணையிட்டு விட்டனர்.**

மஹிந்த சகோதரர்களையும், அவர்களின் ஆதரவாளர்களையும் பொறுத்தவரையில் அவர்கள் மீண்டும் அரசியலுக்குள் வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற முனைவதற்கு சில முக்கிய காரணங்கள் உள்ளன. மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் அவர் மிகவும் ஆக்ரோஷமாக, தனக்கு வாக்களித்த 57 இலட்சம் வாக்காளர்களை என்றுமே கைவிடப்போவதில்லை எனச் சூளுரைத்தமை அவர் அரசியலை விட்டு ஒதுங்கி விடப்போவதில்லை என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தியது. எனினும் அவரை 62 இலட்சம் மக்கள் வீட்டுக்குப் போகும்படி ஆணையிட்டு விட்டனர். அவர் தனக்கு வாக்களித்த 57 இலட்சம் மக்களுக்கான அரசியல் களத்தில் மீண்டும் இறங்கப்போவதாகச் சொல்லிக்கொண்டாலும் அவற்றைவிட அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் வேறு முக்கிய காரணங்கள் உள்ளன.

ஒன்று - அனுபவித்த அதிகாரங்களை இழக்க விரும்பாமை. மற்றையது அதிகாரத்தில் இருந்த போது மேற்கொண்ட ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் என்பன இன்று விசாரணைக் களத்துக்கு வந்துவிட்டன. இவை இவர்களுக்காகச் சிறைச்சாலைகளின் கதவுகளைத் திறந்துவிடும் சாத்தியமும் கூடத் தென்பட ஆரம்பித்துவிட்டன. இந்த இரு நோக்கங்களையும் அடைய மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை அவர்களுக்குத் தவிர்க்க முடியாத தொன்றாகி விட்டது.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு கொடிய சர்வாதிகார ஆட்சியை நடத்தியமை, போரின் வெற்றியைக் காட்டி சிங்கள மக்களை ஏமாற்றிக் கொண்டு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை, அபிவிருத்தி என்ற பெயரில் நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்துகுள் தள்ளி சில நபர்கள் கொள்ளையாகப் பணம் குவித்தமை. சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும், வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டு ஒரு இனவெறி மேலாதிக்கக் கலாசாரத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் வலுப்படுத்தியமை போன்ற கொடுமைகளே மக்களை ஒரு ஆட்சிமாற்றத்தைக் நோக்கிச் செயலில் இறங்கத் தூண்டின.

ஆட்சி மாற்றத்தின் மூலம் இப்படியான ஜனநாயக விரோத நடவடிக்கைகள் களையப்பட்டு ஒரு நல்லாட்சி உருவாகும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

இப்படியான நிலையில் அப்படியான ஒரு நல்லாட்சிக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதைத் தடுத்து மீண்டும் ஒரு இருண்ட யுகத்தை உருவாக்கவே மஹிந்தவும் அவரின் ஆதராவளர்களும் தீவிரமான முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றி அந்த வெற்றிக்குப் பங்களித்த ஐக்கிய தேசியக்கட்சி, மலையக, முஸ்லிம் கட்சிகள் என்பன ஒருங்கிணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளனர். இந்தத் தேசிய

**(16 ஆம் பக்கம் பார்க்க)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# இயற்கை தந்த வளத்தை பாதுகாத்துப் பேணுவோம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தொழிற்றுறை சார்ந்த தேவைகளுக்கு மணல் பெறுவதற்கு உரிமம் வழங்க முடியாது. அதற்கான கனிய வளம் இப்போது அந்தப் பிரதேசத்தில் இல்லை.

கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத - முறையற்ற - மணல் அகழ்வுகளால், மணல் மேடுகள் முழுமையாக அழிந்துவிட்டன; அழிக்கப்பட்டு விட்டன.

மேற்கண்ட அதிர்ச்சி தரும் தகவலை, ஒழிவு மறைவு இன்றி வெளிப்படுத்தி உள்ளது கனியவளங்கள் மற்றும் புவிச் சரிதவியல் பணியகம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்த கட்டுமானப் பணிகளுக்கு மணல் விநியோகிப்பதற்கு, தமக்கு அனுமதி வழங்குமாறு, வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புவிச் சரிதவியல் பணியகத்துக்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் அந்த வேண்டுகையை புவிச் சரிதவியல் திணைக்களம், மேற்போந்த காரணத்தைக் காட்டி நிராகரித்துள்ளது.

குடத்தனையில் ஒரே ஒரு மணல் மேடு மட்டுமே எஞ்சியுள்ளது. அங்கே மணலைத் தோண்டி எடுப்பதற்கு அனுமதி வழங்க இயலாது. மனித வலுவைப் பயன்படுத்தி மேட்டை வெட்டி, கடகங்களில் சுமந்து செல்வதற்கு மட்டுமே அனுமதி வழங்க இயலும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சுமார் பதினைந்து ஆண்டுகளாக, யாழ்ப்பாண தீபகற்பத்தின் தனிக்காட்டு இராசாவாக வலம் வந்த ஒருவரின் செல்வாக்கை, தமது தலைகள் மேல் வைத்துக் கூத்தாடிய " கூட்டங்கள்"-

தம்மைத் தட்டிக்கேட்க எவரும் இல்லை என்ற இறுமாப்புடன் வடமராட்சி கிழக்கின், நீண்டு நெடிந்த, கடற்கரையைத் தமது சொந்தச் சொத்தாக்கி, அங்கிருந்த மண் மேடுகளைக் "கொள்ளை அடித்து" முதலாளிகளா யினர்!

நாடாளுமன்றத்துக்கான அடுத்த பொதுத் தேர்தல் வரை, கனிய வளங்கள் மற்றும் புவிச்சரிதவியல், சுரங் கங்கள் பணியகம் வடமராட்சி கிழக்கின் இயற்கை வளத்தைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று கருதலாம்.

அதுவரை, இப்போதைய கனியவளம் சுரண்டல், தொடராது என்றும் நம்பலாம் - கொள்ளலாம்.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்று மக்களின் தெரிவுகள் வேறு வகையாக அமையுமானால், கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று ஒரு மாற்றம் வராவிடில்....

வடமராட்சி கிழக்கின் மணல் வளம் மீண்டும் சுரண்டப்படும் ஆபத்து உயர்ந்து எழலாம்.


மக்களுக்குரிய இயற்கை வளங்களைச் சீண்டுவோர், சுரண்டுவோர் அவர்கள் எவராயினும், எமது மக்களின் துரோகிகளே என்பதற்குப் பதிலாக வேறெந்த உவமையும் பொருந்தாதே...!

# திரள மறுக்கும் அடம்பன் கொடிகள்

**- ஆசாத்**

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என தமிழில் ஒரு பழ மொழி உண்டு. ஆனால் தமிழ் தலைமைகளோ திரள மறுப்பதில் தீவிரமான அக்கறை காட்டி வருகின்றன.

அண்மையில் சுவிஸ் நாட்டிலுள்ள ஒரு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாகவும் அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் இணைத்துக் கொள்வது பற்றியும் ஒரு



கலந்துரையாடல் இடம்பெற்றதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தப் பேச்சுக்களின் போது மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,ஜனா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர் மேற்படி ஆலோசனை தொடர்பாகச் சுவிஸ் தமிழர் அமைப் பினால் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப் பட்டிருந்த தாகவும் , அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் சுரேஷ் பிறேமச்சந்திரன் தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் செய்தி வெளிவந்த சூடு ஆறுவதற்கு முன்பே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எதிர்வரும் நாடாளுமன் றத் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஒரே அமைப்பாகப் பலம் பெறப் போவதில்லை என்பதையும், அதில் மேலும் கட்சிகளை இணைத்து அதன் பலத்தை அபகரிக்கப்போவதில்லை என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் வலுவான கொள்கையாகக் கொண்டிருப்பதன் வெளிப்பாடே இவை எனக் கருத்துத் தோன்றுகிறது.

**தமிழ் கட்சிகளின் ஐக்கியம் என்பது கானல் நீர் போலவே ஆகி விடுமோ என்ற அச்சம் தான் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.**

கடந்த 2010ஆம் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போதும் அதன் பின்பு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போதும் இறுதியாக இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் போதும் தமிழ் மக்கள் ஏகோபித்த முறையில் தமிழ்த் தேசியக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழ் மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தினர்.

அந்தத் தேர்தலின் போது தமிழ் மக்கள் வாக்களித்தமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே ஒழிய தமிழரசுக்கட்சிக்கோ ஈ.பி.ஆர்.எல்.எவ் வுக்கோ அல்ல. அதாவது தமிழ் மக்களால் தமது தலைமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய மறுப்பது தமிழ் மக்களின் அபிலாசைகளை முற்று முழுதாக நிராகரிக்கும் ஒரு மக்கள் விரோதப் போக்காகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. தற்போது தமிழ்த்தேசிய முன்னணியினராக இயங்கி வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜந்திரேன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் விடுதலைப்புலிகளால் நாடாளுமன்ற அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டவர்கள். அவர்களைப் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைக்க மறுத்ததை எவரும் நியாயப்படுத்த முடியாது. அது விடுதலைப்புலிகளின் அடையாளங்களை ஓரங்கட்டும் முயற்சிகளில் ஒன்றாகவே கருத வேண்டியுள்ளது. அதே வேளையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைய மறுப்பது என்ன தான் வலுவான காரணங்கள் இருந்த போதும் தமது நியாயமான உரிமையை விட்டுக் கொடுக்கும் செயற்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்படும் போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகள் ஆகியன இணைந்தே உருவாக்கப்பட்டன. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பகுதியாக இணைந்து கொண்டதேயொழிய நேரடியாக இணையவில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிக்கு உள்ள உரிமையை விடத் தற்சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு உரிமை அதிகம் என்பது ஒரு யாதார்த்தமாகும். திரு.வி. ஆனந்தசங்கரி செய்த குழப்பத்தின் காரணமாக தேர்தலின் போது உதயசூரியன் சின்னம் பாவிக்க முடியாத நிலையில் வீட்டுச்சின்னம் பாவிக்கப்பட்டது. அதை வைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புகள் ஒரு கட்டத்தில் இந்தியாவை நம்பி தடம் மாறிச் செயற்பட்டாலும் கூட, ஆரம்பகாலத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் போராடியவர்கள் என்பதையும், பல தியாகங்களையும் செய்தவர்கள் என்பதையும் எவரும் மறுத்து விட முடியாது. அதே வகையில் பார்த்தால் தமிழரசுக் கட்சித் தலைமையும் இந்தியாவின் கயிற்றில் ஆடவில்லை எனச் சொல்லி விட முடியாது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்படும் போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகள் ஆகியன இணைந்தே உருவாக்கப்பட்டன. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பகுதியாக இணைந்து கொண்டதேயொழிய நேரடியாக இணையவில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிக்கு உள்ள உரிமையை விடத் தற்சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு உரிமை அதிகம் என்பது ஒரு யாதார்த்தமாகும்.**



அண்மையில் தமிழரசுக் கட்சியினர் தமக்கு தேர்தல்களில் நியமிக்கப்படும் வேட்பாளர் உட்பட சகல விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 51 வீத பங்குகள் வழங்கினாலே அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியுமென அறிவித்திருந்ததாக செய்திகள் வெளிவந்தன.

ஒரு பெரும் முதலீட்டாளர் ஒரு கைத்தொழில் நிறுவனத்தையோ அல்லது வர்த்தக அமைப்பையோ உருவாக்கும் போது, 51 வீதம் பங்குகளை தன் வசம் வைத்துக் கொண்டு ஏனைய 49வீதத்தை சந்தையில் விடுவார். அதாவது அந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் சக்தி அவராகவே இருப்பர்.

அதாவது தமிழரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கள் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட சக்தியாக இருக்கும். ஏனைய அமைப்புகள் அந்த முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

அப்படியான நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு கூட்டணியாக இயங்க முடியுமா? அப்படியான நிலையில் சுரேஷ் பிறேமச்சந்திரன் சகல கட்சிகளுக் கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார். ஏனைய அமைப்புகளும் இந்த 51 வீதம் பங்கு முறையை ஏற்கப் போவதில்லை.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வதில் தடைகளை தமிழரசுக் கட்சி மேற்கொண்டு வந்தது. இப்போது அந்தத் தடைகளுக்கெல்லாம் சிகரம் வைப்பது போன்று 51 வீதம் பங்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகளின் ஐக்கியம் என்பது கானல் நீர் போலவே ஆகி விடுமோ என்ற அச்சம் தான் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இன்று தேசிய அரசியலில் என்றாலென்ன, சர்வதேச அரங்கில் என்றாலென்ன தமிழ் மக்களுக்கு ஒரு பலம் இருக்கிறதென்றால் அது தமிழ் மக்களின் இலட்சிய உறுதியும், அதை அடைவதற்குத் தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு நிற்பதுமேயாகும்.

இந்த ஐக்கியத்தைச் சிதறடிக்க எவர் முயன்றாலும் நிச்சயம் அது ஒரு மக்கள் விரோத நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. வடக்குக் கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து ஒரே குரலை ஓங்கி ஒலிக்க முடியுமென்றால் ஏன் தமிழ் தலைமைகளால் அது முடியவில்லை?

அடிப்படையில் வேட்பாளர்கள் பட்டியலில் எவருக்கு அதிக இடம் ஒதுக்குவது என்பதில் ஏற்படும் போட்டியா? அல்லது சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மேற்கொள்ளும் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளா அல்லது இந்திய உளவு நிறுவனத்தின் சதியா? இல்லையேல் இவை அனைத்தும் சேர்ந்து தானா?

ஒன்று பட்ட இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கும், ஒரே நாடு இரு தேசங்கள் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைக்கும் சமஷ்டி முறையிலான தீர்வு என்ற தமிழரசுக் கட்சியின் கொள்கைக்கும் பெரிய வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாமே வடக்கு கிழக்கு தமிழரின் பாரம்பரிய தாயகத்தையும் , தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்கின்றன.

அப்படியான நிலையில் ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஒரே அமைப்பாகச் செயற்படுவதில் என்ன தடை இருக்க முடியும்?

தொடர்ந்து இப்படியான சுயநல, பதவி வேட்கை நடைமுறைகளில் தமிழ்த் தலைமைகள் ஈடுபடுமானால், காலப்போக்கில் தமிழ் மக்கள் அவர்களை நிராகரிக்கும் நிலையே ஏற்படும். அது ஒடுக்கு முறையாளர்களுக்கும், அவர்களின் அடிவருடிகளுக்கும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்துவதிலேயே போய் முடியும்.

அடம்பன் கொடியும் திரண்டால் தான் மிடுக்கு. இல்லையேல் விளைவது அழிவு தான் என்பதைத் தமிழ்த் தலைமைகள் உணர வேண்டும். குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரை கொடுக்கக் கூடாது. ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகள் கார்டூனைப் பார்க்கிறார்களா பெற்றோர்களே எச்சரிக்கை?

குழந்தைகள் கேலிச்சித்திரம் (கார்ட்டூன்) படங்களை ரசித்து பார்ப்பார்கள்.

இவ்வாறு கேலிச்சித்திரம் பார்ப்பது அவர்களுக்கு பிடித்தமான விடயமாக இருந்தாலும், இதனால் பல விளைவுகளை சந்திக்க கூடும்.

பள்ளியில் இருந்து வீடு திரும்பியவுடன், சிறிது நேரம் பொழுதுபோக்கிற்காக பார்த்தால் அதில் தவறு கிடையாது, ஆனால் விடுமுறை கிடைத்தால் தங்களது நேரங்களை முழுக்க முழுக்க கேலிச்சித்திரம் (கார்ட்டூன்) பார்ப்பதிலேயே செலவிடுவதை பெற்றோர்கள் கண்டிக்க வேண்டும்.

கேலிச்சித்திரம் பார்க்கும் குழந்தைகளின் கற்பனைத்திறன் பாதிக்கப்படுகிறது என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் அதில் வரும் கதாபாத்திரங்களாக கற்பனையில் தம்மை உருவகப்படுத்தி நிஜவாழ்க்கையிலும் நடந்துகொள்கின்றார்கள்.

**மொழி வளர்ச்சி**

கேலிச்சித்திரப் படங்களை ரசித்து பார்க்கும் குழந்தைகள், அதில் என்ன மொழியை பேசுகிறார்களோ, அதே போன்று பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

இதன் காரணமாக அவர்கள் தவறான மொழி ஆளுமையை பின்பற்ற நேரிடுகிறது.

**உடல் உழைப்பு**

'கார்ட்டூன்' பார்க்க வேண்டும் என்ற ஆசையால் குழந்தைகள் வெளியில் விளையாடச் செல்லாமல், வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடப்பார்கள்.

இதனால் வெளியில் சென்று விளையாடுவதினால் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவிப்பதில்லை. மேலும் வீட்டில் அடங்கியிருப்பதால் அவர்களின் உடல்நலமும் துடிப்போடு இருப்பதில்லை. நண்பர்களுடன் பழகும் செயற்பாடும் பாதிக்கப்பட்டு தனிமையில் சோம்பலாக இருக்கப் பழகிவிடுகின்றனர்.

**மனநலம்**

கேலிச்சித்திரப்படங்கள் பார்க்கும் குழந்தைகள், தங்களை சுற்றி என்ன நடந்தாலும் கண்டுகொள்வதில்லை, அதிலேயே மூழ்கிகிடப்பார்கள். படிப்படியாக கல்வியில் நாட்டமும் குன்றிவிடும்.

இதன் விளைவாக தனிமை, அலட்சியப்போக்கு போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் இவை அவர்களின் சமூகநடத்தையையும் பாதிக்கும்.

**உணவுப் பழக்கங்கள்**

தொலைக்காட்சி முன்னால் அமர்ந்து கொண்டு 'கார்ட்டூனை' ரசித்து பார்க்கும்போது, உணவுகளை எடுத்துக்கொள்வதில் கவனம் செலுத்துவதில்லை.

அவ்வாறு உணவுகள் கையில் கிடைத்தாலும், 'கார்ட்டூனைப் பார்த்துக்கொண்டு அதனை சரியாக சாப்பிடாமல், ஏதோ சாப்பிட வேண்டுமே என்ற கட்டாயத்தில் சாப்பிடுவார்கள். இதனால் அவர்களின் உணவு பழக்கங்கள் மாறுவதோடு, உடல்நலமும் பாதிப்படைகிறது.

**கோபம், வன்முறை**

கேலிச்சித்திரப் படங்களைப் பார்க்கும் போது, அதில் வரும் சண்டைகாட்சிகளை குழந்தைகள் செய்ய துணிகின்றனர், வகுப்பறையில் பிற மாணவர்களோடு, கார்ட்டூன் பட பாணியில் சண்டை புரிகின்றனர்.

மேலும், வன்முறை நிறைந்த கார்ட்டூன்கள், வீடியோ விளையாட்டுக்கள் இவற்றிலேயே அவர்களின் கவனம் செல்கிறது. இதனால் அவர்கள் சிறுவயதிலேயே மூர்க்க குணம் கொண்டவர்களாக மாறுகிறார்கள்.


# விழுந்தவன் பிரதமர் தூக்கியவன் விஞ்ஞானி



இங்கிலாந்து நாட்டின் பண்ணையொன்றில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான் ஓர் ஏழைச் சிறுவன். அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது பக்கத்தில் இருந்த குளத்தில் இருந்து சிறுவனின் ஒருவனின் அலறல் சத்தம் கேட்கவே இடையன் ஓடிப் போய் பார்த்தான். அவன் வயதில் ஒருவன் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து நீரில் பாய்ந்து அவனைக் கரைக்கு இழுத்து வந்தான்.

தன்னைக் காப்பாற்றிய இடையனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எதாவது செய்ய விரும்பினான் குளத்தில் விழுந்த சிறுவன், அவன் விரும்பும் எதையும் தான் தருவதாகக் கூறினான். இடையனோ தனக்கு படிக்க வேண்டுமென ஆசையிருப்பதாக கூறினான். உடனே அவனும் தன் தந்தையிடம் கூறி இடையனின் படிப்புக்கு ஏற்பாடு செய்தான்.

அந்த இடையன் தான் உலகப்புகழ் பெற்ற அலெக்சாண்டர் ஃப்ளெம்மிங். குளத்தில் விழுந்த பணக்காரச்



சிறுவன்தான் பின்னாளில் இங்கிலாந்தின் பிரதமராயிருந்த வின்ஸ்டண்ட் சர்ச்சில்.



# கடத்தல்காரர்களுடன் சரணடைந்த நாய்

**பிரேசிலின் தென் சாந்த கத்தரினா மாநிலத்தில் போதைவஸ்துக் கடத்தல் குழுவொன்றை பிராந்திய பொலிஸார் சுற்றி வளைத்துக் கைதுசெய்த போது அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு விசுவாசமான காவல் நாயும் சரணடைந்து பொலிஸாரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.**

**சாந்த கத்தரினா மாநிலத்தில் வர்கெம் கிராண்ட் பிராந்தியத்தின் அயலில் போதைவஸ்து குழுவொன்றை பொலிஸார் சுற்றி வளைத்து அண்மையில் கைது செய்திருந்தனர்.**

**அதன் போது அந்த குழுவினரிடமிருந்து பெருந்தொகையான போதைவஸ்துகள், துப்பாக்கிகள், வெடிபொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தன.**

**இந்நிலையில் சரணடைந்த போதைப் பொருள் கடத்தல்காரர்களை தரையில் படுக்க பொலிஸார் உத்தரவிட்ட போதே அவர்களுக்கு விசுவாசமான குறிப்பிட்ட நாயும் அவர்கள் மத்தியில் படுத்து பொலிஸாரை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களை இனிமேலும் மடையராக்க முனையாதீர்

**நாதன்**

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. தொகுதி ரீதியாகவா அன்றி விருப்பு வாக்கு முறையிலா பொதுத் தேர்தல் நடைபெறும் என்ற வினாவுக்கு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அம்பாறையில் வைத்துப் பதிலளித் துள்ளார். அடுத்த பொதுத் தேர்தல் விருப்பு வாக்கு முறையிலேயே நடைபெறும் என்பதே அதுவாகும். பிந்திய செய்தியின் பிரகாரம் தொகுதி ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும் இணைந்து நடைபெறும் என்பது மற்றொரு தகவல்.

தேர்தல் நெருங்க நெருங்க தமிழர் கூட்டணிக்குள் குத்து வெட்டுக்கள் ஆரம்பமாகி விட்டன. தேர்தலுக்கு முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென அங்கத்துவக் கட்சிகள் கோஷம் எழுப்புகின்றன. பல்வேறு வகையிலும் தாம் புறக்கணிக்கப் படுகின்றனர் என்றும் பொது அறிவிப்புகள் சந்திப்புக்கள் தொடர்பாக தமக்கு எதுவும் தெரிவிப்பதில்லை எனவும் குற்றச்சாட்டுக்களும் சில தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் உரிமைக்காகப் போராடிய இந்தக் கட்சிகள், மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வருகின்றன என்று விமர்சிக் கப்படுகிறது என்பது மறைக்க இயலாத உண்மை. இது இலங்கைத் தமிழரசுக் கட்சியே அதிகாரம் மிக்க கட்சியாகும் ஏனைய கட்சிகளை உள்வாங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும் அது செயற்படுகிறது.

கூட்டமைப்பை பதிவு செய்வதில் தமிழரசுக்கட்சி அக்கறை காட்டவில்லை எனவும் சரியான முடிவு எடுக்கப்படா விட்டால் இணைந்துள்ள ஏனைய கட்சிகள் வேறு முடிவுகளை எடுக்க வேண்டி நேரிடும் என்று அச்சுறுத்தல்கள் மேலெழுவதைக் கேட்க முடிகிறது. அவை கூட்டணியிலிருந்து விலகினால் பார தூரமான விளைவுகளைச் சந்திப்பதுடன் நாடாளுமன்றக் கதிரை களையும் இழக்க நேரிடும் என்பது பொதுவான கருத்து.

மறுபுறத்தில் பிரதேச சபைகளின் ஆளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே ஒற்றுமை யின்மை யும் பதவிப் போட்டிகளும் ஏற்படுவது மேலுயர்ந்து வருகிறது. அதனைத் தவிர்க்கவோ பிரச்சினைகளைத் தீர்க்கவோ முடியாத நிலை.

மாகாண சபை உறுப்பினர் களிடையேயும், ஆளுக்காள் அடி படாத குறையாக முரண்பாடுகள் தோன்றியுள்ளன. மாகாண சபைத் தேர்தலில் பொது வேட்பாளர் நியமனம் பெறுவது முதல், மாகாண சபை உறுப்பினரா கியதும் அமைச்சர் பதவிக்கு அடிபட்டதும் வெளிச்சம். இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் மோட்டார் கார்களுக்கும் இலங்கை மத்திய அமைச்சினால் வழங்கப்பட்ட சொகுசு வாகனங்களுக்கும் முட்டி மோதியதும் இப்போது பரகசியம். Vehicle Menia எனும் ஒரு வகை நோயினால் இவர்கள் பாதிக்கப்பட்டார்களோ என்று வாக்காளர்கள் ஐயமுற்றதும் உண்டு.

மாகாண சபை உறுப்பினராகி விட்டால் இராணுவத்தை வெளியேற்றுவோம், உங்கள் காணிகளை மீட்டுத் தருவோம் என்று வீர முழக்கம் இட்டார்கள். மாகாண சபைக்கு, சபை உறுப்பினர் களுக்கு எத்தகைய அதிகாரங்கள் உண்டு என்பதை அறியாமல் வாய்க்கு வந்தபடி பலதும் பத்தையும் கூறித் திரிந்தார்கள்.

இன்று உள்ள அத்தியாவசிய பிரச்சினைகள் என்ன? அவற்றை நாடி எவற்றை முன்னெடுக்க வேண்டுமெனத் தெரியாமல் தமக்குத் தேவையற்ற , செய்ய முடியாதவற்றை தூக்கித் தலையில் வைத்துக் கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் முதல் படித்த இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி அலைகின்றார்கள். அவர்களுக்கான வேலை வாய்ப்பு களைத் தேடித்தர முடியாத நிலையில் மாகாண் சபை உள்ளது. தொழில் முயற்சியாளர்களை கைத்தொழில் நிறுவனங்களை வடமாகாணத்துக்கு அழைத்து வந்து வடக்கு மக்களுக்கு உதவிட முயற்சிகள் எடுத்ததாகத் தெரியவில்லை.

முன்னாள் ஆளுநரும் பிரதம செயலாளரும் தான் வடக்கு மாகாண சபையை சீராக இயங்க விடுகிறார்கள் இல்லை எனக் கூறி அவர்களை வழியனுப்பினர். மாகாண சபையை பிரதமர் மதிக்கவில்லை எனக் கூறி அவரது நிகழ்வுகளைப் பகிஷ்கரித்தார்கள்.

மீள் குடியேற்றத்துக்கான காணிகளை விடுவிக்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ள வந்த ஜனாதிபதி மைத்திரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, பிரதமர் ரணில் ,மீள் குடியேற்ற இந்து சமய விவகார அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வில் பிரதமரும் முதலமைச்சரும் முறைத்துக் கொண்டதாக மாகாணசபை வட்டாரங்களூடாக கதை பரவியுள்ளது. இவையெல்லாம் மாகாண சபை சிறப்பாக இயங்க வழி வகுக்குமா? என்ற வினாவைத் தோற்றுவிக்கின்றது.

மைத்திரியே ஜனாதிபதி . பிரதமரே ரணில். என தமிழ் மக்களை வாக்களிக்கச் சொன்னது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே.

மத்தியும் மாகாணமும் மோதுவதால் இறுதியில் மாகாணத்துக்கே அழிவு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் யார் அடுத்த வேட்பாளர் என்பதில் இப்போதே இழுபறி தொடங்கி விட்டது. நீண்ட காலம் இருந்தவர்கள் வழி விட்டு மற்றவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமெனப் பல குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. வேட்பாளர் நியமனம் கிடைக்காதவர்கள் சங்கரியாருடனோ , கஜேந்திரன் பொன்னம்பலத்து டனோ அல்லது சுயேட்சையாகவோ போட்டியிட முன் வரலாம் என்று அரசல் புரசலாக பேசப்படுகிறது. எனவே தான் தேர்தலுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய முண்டியடித்தார்கள். ஆனால் தமிழரசுக்கட்சி விட்டுக் கொடுக்கவில்லை எனப்படுகிறது.


சந்தர்ப்பம் வாய்க்கும் போது காலை வாரி விடும் பழக்கம் எம்மவர் பலருக்குமுண்டு. தம் பிள்ளைகள் உறவினர்களை மீட்டுத் தரும் படி யாழ். பஸ் நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினை சாதகமாகப் பயன்படுத்தி கொடும்பாவி எரிக்கப்பட்ட விடயம் பலருக்கும் தெரிந்திருக்கும். இதனால் மாகாண சபையில் நடைபெற்ற கண்டனப் பிரேரணைகளையும் அறி வோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் பங்காளிக் கட்சிகளிடையே மோதல்கள் அதிகரிக்கும் என்று மக்கள் பேசத் தொடங்கி விட்டனர்.

அல்லாமலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜதந்திரத்தை அறிந்தவர். புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணாவைப் பிரித்து புலிகளை சுக்கு நூறாக்கினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் புகுந்து மஹிந்தவை வீட்டுக்கு அனுப் பி னார். இப்போது சுதந்திரக் கட்சியை உடைத்து தேசிய அரசு அமைக்கத் திட்டம் வகுத்துள்ளார். தமிழ்த் தேசிய ' விடுதலைக் கூட்டணியை உடைத்து மாகாண சபை உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைய விடாமல். நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தான் கலந்துரையாடுவேன் எனக் கூறியுள்ளார்.

கட்சிகளை உடைப்பதில் கில்லாடி எனப்புகழ் பெற்றவர் ரணில். நாங்களும் முதலமைச்சரும் இல்லாத இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் சென்றார்கள் என மாகாண சபை உறுப்பினர் களிடையே ஒரே புகைச்சல். மக்களிடையேயும் ஒரு தடுமாற்றம். தமிழரின் 'அரசியல் தரப்புக்கள் மக்கள் நலன்களைத் தூக்கி எறிந்து விட்டு, தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி வருவதே கடந்த பல தசாப்தங்களாக நீண்டு , உயர்ந்து செல்கிறது. பாட்டும் நானே பாவமும் நானே என்று எண்ணி இனிமேலும் வாக்காளரை மடையராக்க இயலாது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18

# சிம்ம சொப்பனம்

அந்தச் சிறிய துப்பாக்கி தன்னை ஆயுத பாணியாக மாற்றி விட்டதை காஸ்ட்ரோ உணர்ந்தார். குறி பார்த்துச் சுடும் திறன் அவருக்கு முன்னரே இருந்தது. அவரது வீட்டில் வேட்டையாடும் கைத்துப்பாக்கிகள் சில இருந்தன. விளையாட்டோடு விளை யாட்டாக காஸ்டரோ துப்பாக்கி களோடு மிக நன்றாகவே பழகியிருந்தார். தற்போது அவர் மார்போடு உராய்த்துக் கொண்டிருந்த துப்பாக்கி அவருக்கு தைரிய மூட்டியது. தனது முதல் போராட்டம் தொடங்கி விட்டதை காஸ்ட்ரோ உணர்ந்தார். 1930,மிகக் கடினமான காலகட்டமாக இருந்தது. தெருவைக் கடந்து ஏதாவது ஒரு பொருளை வாங்கி மீண்டும் வீட்டுக்குத் திரும்புவோமா என்பது சந்தேகமே. துப்பாக்கி என்பது அவசியமாகி விட்டது. அது ஓர் ஆயுதம் என்ற உணர்வே மறந்து போய் பேனாக்கத்தை போல் துப்பாக்கியையும் மறக்காமல் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. பிறரைச் சுட வேண்டும் என்பதற்காக அல்ல. தம்மை யாரும் சுட்டு விடக் கூடாது என்பதற்காக. அதுவும் அரசியல் கருத்துக்களை ஒருவர் கொண்டிருந்தால் அவர் கூடவே துப் பாக்கியையும் வைத்திருக்க வேண்டி யது கட்டாயமாகிப் போனது. நண்பர்கள் துணை நின்றனர். காஸ்ட்ரோ எங்கு சென்றாலும் கூடவே பாதுகாப்பு அரண் போல ஆறேழு பேர் சென்றனர். அத்தகைய பாதுகாப்பு ஏற்பாட்டை உதாசீனப்படுத்தக் கூடாது என்று காஸ்ட்ரோவைக் கேட்டுக் கொண்டனர். அடிக்கடி நண்பர்களி டையே ரகசியச் சந்திப்புக்கள் நடந்தன. ஒரு கட்டத்தில் காஸ்ட்ரோவுக்கு பாதுகாப்புகள் பிடிக்கவில்லை. ஒரு முடி வெடுத்தார். சில நண்பர்களை அழைத் துக் கொண்டு பல்கலைக்கழக சிற்றுண்டி விடுதிக்கு அருகேயுள்ள ஓர் இடத்துக்குச் சென்றார். அது மஃபியா ஆள்கள் சந்தித்துக் கொள்ளும் இடம்!வழக்கம் போல் அன்றும் பலர் விவாதித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று தனது இருப்பிடத்துக்குள் நுழைந்த காஸ்ரோவைக் கண்டதும் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் அவர்கள் நடுங்கிப் போனார்கள். காஸ்ட்ரோ சிரித்துக் கொண்டே வெளியேறி விட்டார்.

துப்பாக்கியால் தைரியம் முளைத்ததைப் போலவே சில பிரச்சினைகளும் முளைத்தன். ஆயுதங்கள் வைத்திருப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டிருந்ததால் (கிளர்ச்சிக் காரர்களுக்கு மட்டுமே தடை, மாஃபியா வுக்கு அல்ல) காவல் துறையினரிடம் மாட்டிக் கொள்ளாமல் இருப்பது முக்கியம். அதனால் துப்பாக்கி வைத்திருப்பதால் ஒரு பக்கம் தைரியம் ஏற்பட்டாலும், மற் றொரு பக்கம் 'எப்போது மாட்டிக் கொள்வோ மோ?' என்ற பதற்றம் இருந்து கொண்டே இருந்தது. எப்போதும் துப்பாக்கி வைத் துக் கொள்வது கடினமானது. பல்கலைக் கழக காவல் துறை, சாலை காவல்துறை, நகர காவல்து றை எனப் பல தடைகள். எப்பொழுது வேண்டுமானாலும் சோதனை செய்யலாம் என்ற நிலை . சிக்கினால் சிறை. மரணம் எது வேண்டுமானாலும் கிடைக்கும். காஸ்ட்ரோ துப்பாக்கியைத் துறந்தார்.

ஒரு முறை காஸ்ட்ரோவை கிட்டத்தட்ட சுற்றி வளைத்து விட்டார்கள். சரியான சமயத்தில் காஸ்ட்ரோவின் நண்பர்கள் அவரைச் காப்பாற்றினார்கள். சீக்கிரத்தில் நிலைமை மாறியது. ஒரு பொதுக்கூட்டத்தில் காஸ்ட்ரோ தரப்பு நபர்களும் மாஃபியா நபர்களும் சந்தித் துக் கொண்ட போது , மெல்ல மெல்ல பேசத் தொடங்கினார்கள். அந்தப் பேச்சு வார்த்தை இணக்கமான ஓர் உடன்பாட்டுக்கு இட்டுச் சென்றது.

காஸ்ட்ரோவின் அரசியல் ஆர்வம் தீவிரமடைந்தது. பல்கலைக்கழக அரசியலைத் தாண்டி வெளி அரசியலி லும் பங்கேற்க ஆர்வம் காட்டினார். அப்போதைய க்யூப இளைஞர்களை கிளர்ச்சியடையச் செய்த ஒரு விஷயம். டொமினிக்கன் ஜனாதிபதி ரபேல் ட்ருஜில்லோ மோலினாவின் அராஜக ஆட்சி முறை. ஒரு சிப்பாயாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய ட்ருஜில்லோ 1930 இல் எதிர்ப்பின்றி ஜனாதிபதியானார். நாடு கடத்தப்பட்ட டொமினிக்கன் கம்யூனிஸ்டுகளை மன் னித்து விடுவதாக கூறி அழைப்பு விடுத்தார். இவரது பேச்சை நம்பி நாடு திரும்பிய கம்யூனிஸ்டுகள் அனை வரையும் ஒருவர் விடாமல் கொன்று குவித்தார்.

பல்கலைக்கழகத்தில் ட்ருஜில்லோவுக்கு எதிராக குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. குறிப்பாக க்யூபாவில் ட்ருஜில்லோவை எதிர்த்துப் போராட பல இளைஞர்கள் முன் வந்தனர்.

காஸ்ட்ரோவும் அவரது குழுவும் கூட இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டியிருந்தது. போராட்டத்துக்காக வளைத்து வளைத்து ஆள்களைப் பிடித்தனர்.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 669

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | 9 | | | | ■ | 10 | |
| 11 | | | | ■ | 12 | | |
| ■ | 13 | | ■ | 14 | | | ■ |
| 15 | | ■ | 16 | | | ■ | 17 |
| | ■ | 18 | | | ■ | 19 | |
| 20 | | | ■ | 21 | | | |

**மேலிருந்து கீழ்**

1 - தூண்டுதல் செய்.
2 - வாழ்தல்.
3 - உள்ளம்.
4 - எல்லையில் இருப்பது.
5 - கேள்வி பதில்.
7 - ஓர் அசைச்சொல்.
9 - திருமணம்.
10- நீரின் ஆழத்தை இதிலும் அளவிடுவர்.
12- ஒரு மாற்றுப் பயிர்.
14- ஆசிரியர் மாணவர்களைத் தண்டிப்பது இதனால்.
15- ஈர் இரண்டு.
16- (உடலில்) மார்புக் கூட்டின் பக்கப் பகுதி .
17 - சாம்பல் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும் சிறு பறவை.
18 - விதையை நிலத்தில் ஊன்றியதும் இடம்பெறும் முதல் செயற்பாடு.
19-குறிப்பிடப்படுவதற்கு அதிகமாக என்னும் பொருள்தரும் இடைச்சொல்

**இடமிருந்து வலம்**

1 - நாட்டியத்தில் சிறந்த தேவலோகப் பெண்.
4 - கையாலோ, மின்சக்தியாலோ இயக்கிப் பயன்படுத்தும் சாதனம்.
6 - முதலாவது தமிழ் மாதத்தின் பெயர்.
8 - ஒருங்கு சேர்த்தல்.
10 - பாவம் செய்தவன்.
11 - தர்க்கம்.
12 - தேர் போன்ற வாகனம்.
13 - ஓர் இயற்கைப் பொருள்.
14 - பிரேதம்.
15 - நம்மைக் குறிப்பிடுவது.
16 -நகத்தோடு கூடிய சிறு உறுப்பு.
18- உலோகப் பொருளுக்கு மேலே பூசும் பூச்சை இப்படி அழைப்பர்.
19-மலை.
20- சிறிய பாத்திரம்.
21-மகள்

அனுப்புபவர் பெயர்:------------------------------

விலாசம்:------------------------------

------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 669

■ சொற்சிலம்பம் போட்டி 669ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மே 13 மற்றும் மே 20 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**போட்டி இல 667இல் பரிசு பெற்றோர்**

1 கா. பூரணம், பொற்கலந்தம்பை, வித்தகபுரம், தெல்லிப்பளை.

2 விஜயன் அமுதா திருக்கேதீஸ்வரம், மன்னார்.

3 நவதுலன் ஹரிஸ்ராம், பத்திரகாளி கோவிலடி, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ள லாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.சண்முகதாஸ், கொத்தியால் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

அ.பொ. திரவியநாதன், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.

இ.சயந்தன், இலங்கை மின்சார சபை, முல்லைத்தீவு.

இ.செல்லம்மா, சோறன்பற்று, பளை.

அ.தருணீஸ்கன், சோதிவாசம்,தையிட்டிபுரம்,வித்தகபுரம், தெல்லிப்பளை.

**சொற்சிலம்பப் போட்டி 667இன் விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1.ஆகாது.
2.சீர்வரிசை.
3.வாசம்.
4.தடை.
5.பாசி.
8.பலம்.
10.ரசி.
11.கடம்.
13.குடம்.
14.பிரதிவாதி.
15.இருபது.
16.மகன்.
17.சுவடு.
18.கல்வி.
20.கண்.
21.அலை.

**இடமிருந்து வலம்**

1. ஆசீர்வாதம்.
6. கார்.
7.சடை.
8.பசி.
9.துவரம்.
11.கல.
12.ரிசி.
13.குடம்பி.
15.இசை.
16.மடம்.
17.சுகம்.
18.கதி.
19.பகவன்.
21.அல்வா.
22.துண்டு.
23.தலைவிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலிர்த்து நிற்கும் சிங்கப்பூர் 1



பல இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கும் நாடு. ஆனால் அந்த நாட்டுக்குப் பெயர் கொடுத்தது ஓர் இந்திய மொழிதான். 'சிங்க நகரம்' என்ற பொருளைத் தரும் சமஸ்கிருத வார்த்தைதான் சிங்கப்பூர்.

எல்லாமே இருக்கும் நாடு. எதுவுமே இல்லாத நாடு. இந்த இரண்டுக்கும் உதாரணங்கள் கொடுக்கச் சொன்னால் நீங்கள் ஒரே ஒரு உதாரணம் கொடுத்தால் கூடப் போதும். சிங்கப்பூர் மேற்படி இரண்டு விளக்கங்களுக்குமே பொருந்தக் கூடிய நாடு. எப்படி என்பதைப் பிறகு பார்ப்போமே.

ஒரு முக்கிய தீவு. 63 சிறிய தீவுகள் - இவைதான் சிங்கப்பூர். சிறிய தீவுகளில் பெரும்பாலானவை மக்கள் வசிக்காதவை. தொன்மைக் காலத்தைச் சேர்ந்த பிரபல வானியல் நிபுணர் தாலமின் 'சபனா' என்று குறிப்பிட்டிருப்பது சிங்கப்பூர் பகுதியையா? இதில் சரித்திர ஆய்வாளர்களுக்குக் கொஞ்சம் குழப்பம் இருக்கிறது.

ஆனால் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன ஆவணங்கள் சிங்கப்பூர் குறித்து ஓரளவு தெளிவாகவே குறிப்பிட்டுள்ளன. 'பூ லுவோ சுங்' இதன் அர்த்தம் 'தீவின் முடிவு'. மலாய் தீபகற்பத்தின் முடிவில் இருந்தது சிங்கப்பூர்.

மலேயா பகுதிகளில் ஒரு பிரபல நாடோடிக் கதை உண்டு. சுமத்ராவைச் சேர்ந்த (சுமத்ரா இப்போதைய இந்தோனேஷியாவின் ஒரு பகுதி) இளவரசன் ஸ்ரீவிஜயன் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஒரு தீவில் காலடி வைத்தார். அங்கே அவர் முதலில் கண்டது ஒரு சிங்கத்தை. ஆஹா, என்னவொரு மங்களமான குறியீடு என்று ஆனந்தப்பட்டார். அந்தத் தீவில் மக்களைக் குடியேற்றினார். 'சிங்கபுரா' என்று அதற்குப் பெயரிட்டார். (ஆனால் சிங்கப்பூரில் எப்போதுமே சிங்கங்கள் இருந்ததில்லையே. அவர் பார்த்தது புலியாக இருக்கலாம் என்று முணுமுணுக்கும் சரித்திர ஆராய்ச்சியாளர்களும் இருக்கிறார்கள்)

பதினோராம் நூற்றாண்டில் சோழச் சக்கரவர்த்தி முதலாம் இராஜேந்திர சோழன் விஜய சாம்ராஜ்யத்தை வெற்றிகண்ட போது சிங்கப்பூரும் சோழர்கள் வசம் வந்தது.

பதினான்காம் நூற்றாண்டில் 'சயாம்' மற்றும் 'மஜாபாகித்' பேரரசுகளுக்கிடையே சிங்கப்பூரை அடைவதற்குக் கடும் போட்டி ஏற்பட்டது. (இன்றைய தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா என்று இவற்றைத் தோராயமாகக் குறிப்பிடலாம்). மஜாபாகித் பேரரசு சிங்கப்பூரை வெற்றி கண்டது. பல வருடங்கள் அதனை ஆண்டது.

**எல்லாமே இருக்கும் நாடு. எதுவுமே இல்லாத நாடு. இந்த இரண்டுக்கும் உதாரணங்கள் கொடுக்கச் சொன்னால் நீங்கள் ஒரே ஒரு உதாரணம் கொடுத்தால் கூடப் போதும். சிங்கப்பூர் மேற்படி இரண்டு விளக்கங்களுக்குமே பொருந்தக் கூடிய நாடு.**

காலப்போக்கில் சிங்கப்பூர் மலாகா சுல்தானிடம் சென்றது. இப்படிப் பலரிடம் கைமாறிய சிங்கப்பூர் 1511இல் போர்த்கேயர் வசப்பட்டது. அவர்கள் சிங்கப்பூரிலுள்ள அத்தனை குடியேற்றங்களையும் அழித்தனர். அடுத்த இரு நூற்றாண்டுகளுக்கு சிங்கப்பூர் என்ற தீவே ஊர்பேர் தெரியாமல் போனது.

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பிய ஆதிக்க சக்திகள் உலகெங்கும் கிளை பரப்பின. பிரிட்டிஷ்காரர்களின் பார்வை மலாய் பகுதியிலும் பட்டது. சர் ஸ்டாம்ஃபோர்டு ராஃபில்ஸ் என்பவர் மலேயா பகுதிக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் கிழக்கிந்தியக் கம்பனியில் 1795இல் குமாஸ்தாவாகச் சேர்ந்தவர். தன் திறமையால் பல பதவி உயர்வுகளைப் பெற்று 1805இல் பினாங்குக்கு அனுப்பப்பட்டார். ஆறு வருடங்களுக்குப் பிறகு ஜாவா பகுதியின் லெப்டினென்ட் கவர்னர் ஆனார்.

பினாங்கு, ஜாவா பகுதியிலுள்ள டச்சுக்காரர்களின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டும், சீனா மற்றும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கான வணிகப் பாதையை தடையற்றதாக மாற்ற வேண்டும். (அப்போதுதானே சீனாவுக்கு நிறைய ஓபியத்தை ஏற்றுமதி செய்யலாம்! ஹொங்கொங் சரித்திரம் நினைவுக்கு வருகிறதா?). - இவைதான் பிரிட்டிஷ் அரசால் அவருக்கு இடப்பட்ட முக்கிய கட்டளைகள்.

டச்சுக்காரர்களின் மீது பிரிட்டன் கோபம் கொண்டதற்கு சாம்ராஜ்யப் போட்டியைத் தவிர அந்தப் பகுதி தொடர்பான ஒரு காரணமும் இருந்தது. தங்கள் வசமிருந்த துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பல்கள் வந்து இறங்குவதற்கு டச்சுக்காரர்கள் அனுமதிக்க மறுத்தார்கள். அப்படியே அனுமதித்தாலும் அதற்கு அதிகமான நுழைவுக் கட்டணம் விதித்தார்கள்.

என்ன தீர்வு? ஸ்டாம்ஃபோர்டு தீவிரமாக யோசித்தார். மலாகா ஜலசந்தியில் புதிதாகவே ஒரு துறைமுகத்தை உருவாக்கத் தீர்மானித்தார். இதற்காக மலேயா தீபகற்பத்தின் பல பகுதிகளை ஆராய்ந்தார். சிங்கப்பூர்தான் சிறப்பான இடம் என்று முடிவெடுத்தார். இத்தனைக்கும் அது சேற்று நிலங்களும், காட்டுப் பகுதியாகவும் மிகக் குறைந்த மக்கள் தொகையும் கொண்டதாகவும் இருந்தது. எனினும் அங்கு ஒரு துறைமுகம் உருவாக்கப்பட்டால் அதனால் உண்டாகக்கூடிய நன்மைகளைத் தெளிவாகவே கணிக்கும் தொலை நோக்குப் பார்வை அவரிடம் இருந்தது.



அப்போது அந்தத் தீவை ஜோஹோர் சுல்தான் என்பவர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவர் டச்சுக்காரர்களுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தவர். சுல்தான் 1812இல் இறந்தார். அவரது இரண்டு மகன்களும் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டனர். ரஃபில்ஸ் மூத்தவர் உசேனை ஆதரித்து அவரை சுல்தான் ஆக்கினார். பதிலுக்கு சிங்கப்பூரைப் பெற்றுக்கொண்டார். இலவசமாக அல்ல. ஆண்டு வாடகைக்குதான்.

அடுத்த சில வருடங்களிலேயே பிரிட்டன் தனது ஓநாய் இயல்பை வெளிக்காட்டியது. மொத்தமாக ஒரு தொகை தந்துவிடுகிறோம். சிங்கப்பூர் எங்களுக்குத்தான் என்றது. உசேன் தயங்கினார். பிரிட்டன் விடவில்லை. பலவித குறுக்கு வழிகளின் மூலம் சுல்தானை சம்மதிக்க வைத்தது. 1819 பெப்ரவரி 6 அன்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

நவீன சிங்கப்பூர் பிறந்தது.

(இன்னும் வரும்..)

- ஜி.எஸ்.எஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்வாங்கிய ஜில்லா வெளியிடத் திட்டம்

விஜய், காஜல் அகர்வால் நடித்து 2014ஆம் ஆண்டு பொங்கல் சிறப்பாக வெளியான படம் ஜில்லா. இந்தப்படத்தை தெலுங்கில் வெளியிடு செய்யவிருப்பதாக முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகு வெளியிடு பற்றி எந்த அறிவிப்பும் இல்லாமல் போகவே தற்போது படம் தெலுங்கில் நேரடியாக மறுபதிப்பாக வெளியாக உள்ளது.

சமீபத்தில், ஜில்லா படத்தை இயக்கிய நேசனே தெலுங்கு வெளியீட்டை இயக்கப் போவதாக செய்திகள் வெளியாகின. பின் ஜில்லா படத்தை தெலுங்கில் வெளியிடு செய்யப் போவதில்லை என அதன் வெளியீட்டு உரிமையை வாங்கிய நிறுவனம் அறிவித்தது. அதற்குப் பதில் ஜில்லாவை தெலுங்கில் மறுபதிப்பு செய்து வெளியிட இருக்கிறார்கள்.

இதே பாணியில் கத்தி படத்தின் தெலுங்கு வெளியீடும் இழுபறியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது ஜூனியர் என்.டி.ஆர் அந்தப் படத்தில் நடிக்க இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாயியுள்ளன குறிப்பிடத்தக்கது

# -புலி வெளி[...] திகதி மாற்றம்

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்துவரும் [...]
தற்போது தலக்கோணம் அருவிப் பகுதியில் நட[...]
ஹன்சிகா, ஸ்ரீதேவி, ஸ்ருதி, நந்திதா, சுதீப் நடி[...]
விஜய்யின் பிறந்தநாளில் வெளியிடத் திட்டமிட்டி[...]
வரவு செலவு திட்ட படங்கள் இனி பண்டிகை கா[...]
பத்து நாள்கள் மட்டுமே என அறிவிக்கப்பட்டதா[...]
களின் வெளியீட்டுத் திகதிகள் மாற்றப்பட்டு வரு[...]
படத்தின் பிரமாண்டம் கருதி இன்னும் படப்பிடிப்[...]
உள்ளதும் இன்னொரு காரணம்.

அந்த வகையில் இப்போது புலி படமும் விடுமு[...]
இணைந்துள்ளது. சமீபத்திய தகவல், ஆவணி [...]
படம் வெளிவருகிறது என நெருங்கிய வட்டங்க[...]
தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துவரும் இந்தப் [...]
பதிவு





# அஜித் தங்கையாக லெட்சுமிமேனன்?

அஜித் நடிக்கவிருக்கும் 56ஆவது படத்தினை சிறுத்தை சிவா இயக்குகிறார். இந்தப்படத்தில் அஜித்துக்கு தங்கையாக லெட்சுமி மேனன் நடிக்கவிருக்கிறார். அண்ணன், தங்கை பாசத்தை மையமாகக் கொண்டு உருவாக இருக்கிறதாம் படம். அஜித்துக்கு தங்கையாக யாரை நடிக்க வைக்கலாம் என்ற தேடுதல் வேட்டை நடைபெற்றது. மேலும் படத்தில் தங்கை வேடம் தான் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரமாம். இந்த பாத்திரத்துக்கு நித்யா மேனன், ஸ்ரீதிவ்யா போன்றவர்களிடமும் பேச்சு வார்த்தை நடந்தது. இறுதியில் இந்தப்படத்தில் லெட்சுமி மேனனிடம் தற்போது பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இதுகுறித்து லட்சுமி மேனன் கூறுகையில், ஆம் அந்த வேடத்தில் நடிக்க என்னிடம் கேட்டார்கள். ஆனால் இவ்வளவு சீக்கிரம் என் முடிவை சொல்ல இயலாது. படத்தின் கதையை முழுமையாக கேட்ட பிறகே முடிவை சொல்ல இருக்கிறேன் என தெரிவித்துள்ளார் அவர்.

ஸ்ருதிஹாசன் நாயகியாவார், அனிருத் இசையமைக்கிறார். இந்தப்படத்தின் பூஜை சமீபத்தில் நடந்தது. என்னை அறிந்தால் படத்தைத் தயாரித்த ஏ.எம். ரத்னம் இந்தப்படத்தினையும் தயாரிக்கிறார். அடுத்தமாதம் கொல்கத்தாவில் படத்தின் படப்பிடிப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் நயன்தா[...]

நயன்தாரா சில பட[...]
களில் நடிக்க தயக்கம்
காட்டி, வாய்ப்புகளை
மறுத்து வந்தார். அதில்
ஜீவா நடிக்க ராஜ்னாத்
இயக்கும் படமும் ஒன்று[...]
ஆனால் தற்போது அதி[...]
நடிக்க
ஒப்புக்கொண்டுள்ளாரா[...]
விசாரித்ததில் அவர் நடி[...]
அனாமிகா, நண்பேன்[...]
படங்கள் சரியாகப்
போகாததால், வரும்
வாய்ப்புகளை ஏன் மறு[...]
வேண்டும், வளைத்துப்[...]
போடுவதுதான்
புத்திசாலித்தனம் என்ப[...]
இந்த முடிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ளியீட்டுத் ...றம்

...துவரும் புலி படத்தின் படப்பிடிப்பு
...யில் நடந்து வருகிறது.
...திப் நடிக்கும் இந்தப் படத்தை
...ட்டமிட்டிருந்தனர். ஆனால் பெரிய
...கை காலங்களில் என வருடத்தில்
...பட்டதால் தற்போது பல படங்
...ட்டு வருகின்றன. அதேவேளை
...ப்பிடிப்புகள் முடிவடையாமல்

...விடுமுறை தினத்தில்
...ஆவணி 15 சுதந்திர தினத்தன்று
...ட்டங்கள் தெரிவித்துள்ளன.
...இந்தப் படத்துக்கு நட்டி ஒளிப்



## தமிழிலும் படம் இயக்கும் ரேவதி

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகை ரேவதி ஒரு திரைப்படத்தை இயக்க இருக்கிறாராம். ஏற்கெனவே அவர் இரண்டு படங்களை இந்தியில் இயக்கி இருக்கிறார். இந்த முறை தமிழில் தன் படத்தை இயக்கப்போகிறாராம்.



## 10 லட்சம் பரிசு

சமீபத்தில் வெளியாகிய கொம்பன் வெற்றி பெற்றதில் மகிழ்ச்சியில் இருந்த படத்தின் தயாரிப்பாளர், ஒளிப்பதிவாளர் வேல்ராஜுக்கு 10 லட்சம் பரிசாகக் கொடுத்தாராம். வேல்ராஜோ, இந்த வெற்றிக்கு என் மற்றைய உறுப்பினர்களும் முக்கிய காரணம் எனக்கூறி, அதை அப்படியே தன் குழுவினருக்கு பகிர்ந்து கொடுத்து இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டாராம்.

## விரைவில் அறிவிப்பு

இந்திய சினிமாவையே ஒரு கலக்கு கலக்கிய படம் த்ருஷ்யம். கமல்ஹாசன், வெங்கடேஷ், அஜய் தேவ்கன் என முன்னணி நடிகர்களே அதன் மறுபதிப்பில் நடிக்கும் அளவுக்கு இருந்தது அதன் வீச்சு. மலையாள சினிமாவின் ஆல் டைம் ரெக்கார்டு படமான த்ருஷ்யம் படத்தின் நாயகனான மோகன்லாலும், இயக்குநர் ஜீது ஜோசப்பும் மீண்டும் இணையப்போகிறார்களாம். கூடிய விரைவில் அறிவிப்பு வெளிவரும்!

## இயக்குநராகிறார் ரஹ்மான்!

இதுநாள்வரை இசையை மையம் கொண்டிருந்த இசைப்புயல் ரஹ்மான் முதல் முதலாகப் படம் ஒன்றை தயாரிக்கப் போகிறார். ஆனால் தமிழில் அல்ல, திரையுலகில். தான் எழுதிய இரண்டு திரைக்கதைகளில் ஒன்றை இயக்க வில்வேஷ் என்ற இயக்குநரை அறிமுகப்படுத்துகிறார். தமிழுக்கும் வாங்க!

## ஒரே மாதத்தில் இரண்டு படங்கள்

விஜய்சேதுபதி - காயத்ரி நடிப்பில் உருவாகியுள்ள மெல்லிசை மற்றும் விஜய்சேதுபதி முதல்முறையாக நயன்தாராவுடன் இணைந்துள்ள நானும் ரவுடிதான் இரண்டு படங்களும் ஜூன் மாதம் வெளியாகவிருக்கின்றன. ஒரேமாதத்தில் தான் நடித்த இரண்டு படங்கள் திரைக்கு வரவிருப்பதில் உற்சாகமாக இருக்கிறாராம் விஜய்சேதுபதி.



## பாகம் 2 தயாராகிறது

கே.வி.ஆனந்த் இயக்கிய கோ படத்தின் இரண்டாம் பாகம் தயாராகிறது. பாபி சிம்ஹா நாயகியாகவும், நிக்கி கல்ராணி நாயகனாகவும் நடிக்க இருக்கிறார்கள். முக்கிய பாத்திரத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். கோ படத்தின் தொடர்ச்சியாக உருவாகவுள்ள இந்தப் படத்தை, இயக்குநர் விஷ்ணுவர்தனின் உதவியாளர் சரத் என்பவர் இயக்குகிறார்!

## சினிமாவில் சில விசித்திரங்கள்

சினிமாவில் மட்டுமே சில விசித்திரங்கள் நடைபெறும் சாத்தியம் உண்டு. தன் ஜூனியர் நடிகர் ...தையை ... ஆர்யாவிடம் சொன்னபோது தனக்கும் பிடிக்கவில்லை என்று மறுத்துவிட்டார் ஆர்யா. தற்போது அதில் நடிப்பவர் விக்ரம். சில வருடங்களுக்கு முன்பு யாவரும் நலம் இயக்குநர் விக்ரம் கே குமார் சொன்ன 24 படத்தின் கதை தனக்கு பிடிக்கவில்லை என்று மறுத்தார் விக்ரம். தற்போது அந்தக் கதையை ஓகே செய்திருப்பவர் ஆர்யா. ஒரு வாசல் மூடினால்...!


... சில படங்
...பக்கம்
...புகளை
...ர். அதில்
...ம்னாத்
...ம் ஒன்று.
...பாது அதில்

...ன்னாராம்.
...அவர் நடித்த
...ன்பேண்டா
...ாகப்
... வரும்
... ஏன் மறுக்க
...வைத்துப்
...
...ம் என்பதால்

## ...ன்தாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை அறிந்தால்...

உயர்நிலைப் பள்ளி ஒன்றின் அறிவியல் ஆசிரியர் அன்று விடுப்பு. தமிழாசிரியர் அவருக்குப் பதிலாக வகுப்புக்கு வந்தார்.
வழக்கத்துக்கு மாறாக அன்று அவரது கையில் ஒரு கண்ணாடிச் சாடி இருந்தது. மாணவர்களிடம் சிறு சலசலப்பு. ஆசிரியர் ஏன் இந்தக் கண்ணாடிச் சாடியைக் கொண்டு வந்துள்ளார்? ஒருவர் ஒருவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.
அந்த வகுப்பு மாணவன் மகேஷ். குறும்புக்காரன். ஒரு கதை சொல்லுங்கள் ஆசிரியர்... அறிவியல் பாடம் ஏதாவது நடத்தி எங்களை அறுத்துவிடாதீர்கள்... என்றான்.
ஆசிரியர் பொறுமையுடன், முன் வாங்கில் இருந்த மாணவனிடம், விறாந்தையில் இருக்கும் தண்ணீர்ப் பானையிலிருந்து. இந்தச் சாடியில் பாதியளவுக்கு மட்டும் தண்ணீர் பிடித்துக் கொண்டு வா...' என்றார்.
அவனும் அவ்வாறே கொண்டு வந்து மேசை மீது வைத்தான். ஆசிரியர், மகேஷிடம் கேட்டார்- உனக்கு, இந்தச் சாடி எவ்வாறு தெரிகிறது?'
அவன் வேகமாகச் சொன்னான் - இந்த சாடி, அரைவாசி வெற்றிடமாக உள்ளது. மேல் மாடி காலி...'
மாணவர்கள் கொல்லென்று சிரித்தனர்.
மற்றொரு மாணவன், மணிகண்டன். அவன் நன்றாகப் படிப்பான். நல்லவன். அவனிடம் அதே கேள்வியைக் கேட்டார் ஆசிரியர்.
ஐயா, இந்த சாடியில் பாதியளவு நீர் இருக்கிறது. அது யாருக்காவது தாகம் தீர்க்க உதவும்...' என்றான் மணிகண்டன்.
ஆசிரியர் கூறினார். மகேஷ், இல்லாததைப் பார்த்தான். மணிகண்டன் இருப்பதைப் பார்த்தான். அதுவே அவனது உயர்வுக்குக் காரணம். உங்களிடம் உள்ள நல்ல திறமைகளை அறிந்துகொண்டால், நீங்கள் மேலும் மேலும் உயர்வது உறுதி!' என்றார் ஆசிரியர்.

# உப்போ உப்பு



உணவில் உப்பு இருந்தால் தான்
உண்ண முடியும் நம்மாலே!
கணமும் உப்பு இல்லாமல்
காலம் தள்ள முடியாதே!

உப்பின் தந்தை கடலாகும்
உப்பளம் உப்பின் இடமாகும்!
உப்பில் அயோடின் இருந்தால் தான்
உடலும் நலமாய் இருந்திடுமே!

உப்பை அதிகம் சேர்த்தாலே
உயரும் ரத்த அழுத்தமே!
எப்பவும் அளவாய் இருந்தாலே
என்றும் நலமாய் வாழ்ந்திடலாம்!

உப்பு யாத்திரை குஜராத்தில்
உத்தமர் காந்தி தலைமையிலே!
உப்புக் காகப் போராட்டம்
உலகை உலுக்கி எடுத்ததுவே!

உப்பே உணவுக்குச் சுவையாகும்
உப்பின்றேல் அது குப்பையாகும்!
உப்பும் உணவும் போலவே நாம்
உலகில் ஒன்றாய் வாழ்வோமே!

## வாங்க சிரிக்கலாம்



**கம்பன்;**-இந்தக் கப்பல் தள்ள
டிக்கிட்டே போகுதே.
ஏன் தெரியுமா?
**காசி:**- ஏன்?
**அவர்:** இது சரக்கு கப்பல்!

# புதிய குறுங்கோளுக்கு மலாலாவின் பெயரை சூட்டியது நாசா

பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுவர் புரட்சியாளரும் மிக இளவயதில் சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றவருமான சிறுமி மலாலா யூசுஃப்சாயின் பெயரை சூரிய மண்டலத்தைச் சுற்றி வரும் ஓர் குறுங்கோளுக்கு சூட்டி பெருமை சேர்த்துள்ளனர் நாசா விஞ்ஞானிகள்.

நமது சூரிய குடும்பத்தில் ஆயிரக் கணக்கான குறுங்கோள்கள், செவ்வாய்க் கிரகத்துக்கும் வியாழனுக்கும் இடையே உள்ள கியூப்பர் பெல்ட்டில் சூரியனை சுற்றி வருகின்றன. இவற்றில் ஒன்று 2010 ஜூன் மாதம் கண்டுபிடிக்கப் பட்டு, அதற்கு குறுங்கோள் 316201 எனப் பெயரும் இடப் பட்டிருந்தது. இந்தநிலையில் மலாலாவின் சொந்த வரலாற்றைக் கேள்விப் பட்டு அதனால் ஈர்க்கப் பட்ட அமி மைன்ஷெர் என்ற விஞ்ஞானி இந்த குறுங்கோள் 316201 இற்கு மலாலாவின் பெயரை சூட்டி அண்மையில் பெருமை சேர்த்துள்ளார். அதாவது இனிமேல் குறித்த குறுங்கோள் '316201 மலாலா' என்றோ அல்லது '2010 ML48' என்றோ தான் அழைக்கப் படும். '316201 மலாலா' குறுங்கோளானது செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே ஒவ்வொரு51/2 வருடத்துக்கும் ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகின்றது. சுமார் 4 Km விட்டமே உடைய இந்த விண்கல்லின் மேற்பரப்பானது பிரிண்டரின் டோனர் போன்று மிகக் கருமையாக உள்ளது.

இந்நிலையில் '316201 மலாலா' என்ற பெயரைச் சூட்டிய அமி மைன்ஷெர் கூறுகையில், பெண் சிறுமிகளின் கல்வி உரிமைக்காகப் போராடிவரும் மலாலாவின் தன்னம்பிக்கையால் தான் ஈர்க்கப் பட்டே இந்தமுடிவை எடுத்ததாகவும் வருங்காலத்தில் மனித இனத்தின் மிகக் கடினமான சிக்கல்களைத் தீர்ப்பதில் ஆண் பெண் என அனைத்துத் தரப்பினரதும் மூளையும் சக்தியும் எமக்குத் தேவைப் படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# விலங்குகள் பற்றி அறிந்து கொள்வோம்





■ சிறுத்தையால் சிங்கத்தைப் போல் கர்ஜிக்க முடியாது. பூனையைப் போல மியாவ் என்ற ஓசையைத்தான் எழுப்பும்.
■ ஓர் ஒட்டகத்தை விடவும் அதிக நாள்களுக்குத் தண்ணீரின்றி எலியால் தாக்குப் பிடிக்க முடியும்.
■ ஒட்டகப் பறவை என்று நெருப்புக் கோழி அழைக்கப்படுகிறது. அது ஒட்டகத்தைப் போல பல நாள்கள் தண்ணீர் குடிக்காமலேயே வாழக் கூடியது என்பதால் அதற்கு இந்தப் பெயர்.
■ மரங்கொத்தியால் ஒரு நொடிக்கு 20 முறை மரத்தைக் கொத்தித் தள்ள முடியும்.
■ காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.
■ ஒரு சாதாரண பசு அதன் வாழ்நாளில் 2லட்சம் குவளை பால் கொடுக்கும்.
■ உலகிலேயே மிகச் சிறிய பாலூட்டி, தாய்லாந்தில் காணப்படும் பப்ளியி என்ற வெளவால் இனமாகும்.
■ டொல்பின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும்.
■ நீலத் திமிங்கலம் எழுப்பும் ஒரு வித விசில் ஒலி, விலங்குகள் எழுப்பும் ஒலிகளிலேயே மிகவும் பலமானதாகும். அதன் அளவு 188 டெசிபல்கள்.



■ வேட்டையாடுவது உள்ளிட்ட முக்கியமான பணிகளை பெண் சிங்கமே செய்கிறது. ஆண் சிங்கம் பெரும்பாலும் ஓய்வெடுப் பதும், குழந்தை களை கவனிப் பது போன்ற பணிகளை மட்டுமே செய்யும்.
■ ஜெலி மீனில் 95 சதவீதம் தண்ணீர் தான் உள்ளது.
■ பென்குயின்களில் பெண் இனம் முட்டை இடும் பணியை செய்கிறது. ஆண் இனம்தான் அடை காத்து குஞ்சு பொரிக்கும் பணியை மேற்கொள்கிறது.
■ மனிதனுக்கு அடுத்தபடியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்ஸி குரங்குதான்.
■ பிறந்த யானைக் குட்டி 6 மாதங்கள் வரை வெறும் தாய்ப்பாலை மட்டுமே குடிக்கிறது. யானைக்கு 4 பற்கள் உள்ளன. இவை சுமார் நூறு தடவை விழுந்து முளைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான கூந்தல் உள்ள பெண்ணா நீங்கள்...?

இளைய தலைமுறையின் தலை முடிக்கும் பாலியல் உணர்வுக்கும் தொடர்பிருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். பண்டைய காலத்தில் இருந்தே தலை முடியானது மனிதர்களின் உணர்வுகளைத் தூண்டும் பொருளாக இருந்துள்ளதாக நிபுணர்கள் கண்டறிந் துள்ளனர்.

கூந்தல் என்பது மனிதர்களின் அழகோடு தொடர்புடையது. இது முக்கிய அம்சமாக கருதப்படுவதாலேயே இல்லறத்தை வெறுத்த பிரம்மச்சாரினிகளும், கிருஸ்தவமத சகோதரிகளும் தங்களின் அழகை மறைக்க கூந்தலை சுத்தமாக வழித்துவிட்டோ அல்லது முக்காடிட்டு மறைத்துக்கொண்டோ வாழ்க்கின் றனர்.

கூந்தலானது கவர்ச்சியான அழகைத் தரக்கூடியது. தலையின் மீது கருகருவென நீண்ட கூந்தல் அமைந்திருந்தால் அந்த பெண்ணின் அழகு அதிகரிக்கிறது. இதனால் பெரும்பாலானோரின் கண்கள் அந்த பெண்ணைத் தான் பார்க்கின்றன. அழகான கூந் தலுக்கும் தாம்பத்திய உறவுக்கும் தொடர்புடையதாக நிபுணர்கள் கூறியுள்ளனர்.


அழகான கூந்தல் என்பது பெண் மையின் அம்சம். அது மென்மையை உணர்த்துகிறது. பெண்ணின் தைரியத்தை காட்டுகிறது. அனைவருக்கும் கவர்ச்சியான அழகையும் தருகிறது.

கூந்தலானது கண்களை கவர்கி றது. அதனைத் தொடத் தூண்டுகிறது. எத்தனையோ வடிவங்களில் நகை களை அணிந்தாலும் கூந்தல் இல்லாத பெண்களுக்கு அழகு சற்று குறைவாகத்தான் இருக்கும். கூந்தலானது கவர்ச்சியின் அம்சமாக கருதப்படுவதால் தான் பண்டைய காலங்களில் கணவனை இழந்த பெண்களின் கூந்தலை வழித்து தலையில் முக்காடிட்டு வந்துள்ளனர். புத்தமதம், கிறிஸ்தவ மதத்தை தழுவியவர்கள் , துறவியாக முடிவு செய்த பெண்கள் தங்கள் கூந்தலை முற்றிலும் வழித்துக் கொண டனர். இதன் மூலம் தங்களின் அழகை பிறருக்கு காட்சிப் பொருளாக்காமல், பிறரை இம்சிக்காமல் இறைவன் சேவையை கருத்தில் கொண்டு வாழ்கின்றனர் துறவிகள்.

கார்மேக கூந்தலைக் கொண்ட பெண்கள் சாதாரணமாக உடை அணிந் திருந்தாலும் அந்த கூந்தல் அழகே அவளை பேரழகியாகக் காட் டும். அதனால்தான் கூந்தல் வளர்ச்சிக்கு அனைவரும் முக்கியத்துவம் கொடுக் கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் கூந்தலானது காதல் உணர்வை அதிகரிக்கும் பொருளாக இருந்துள்ளது. பெண்ணின் கூந்தல் அழகு, ஆணின் மூளையில் சமிக்ஞைகளை தூண்டு கிறது. அதேபோல் ஆணின் தலை யில் கூந்தல் இருப்பதுதான் அவர்க ளின் அழகையும் கவர்ச்சியினையும் அதிகரிக்கிறது. அதனால்தான் பெரும் பாலான ஆண்கள் கொஞ்சம் தலைமயிர் உதிரத்தொடங்கினாலே அழகு போய்விட்டதே என்று பதறத் தொடங்குகின்றனர்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நறுமணத் தைலங்களை தடவி கூந்தலை வளர்த்ததாக தகவல்கள் தெரிவிக்கின் றன. கூந்தலை அழகுபடுத்துவது மனிதர்களின் சுதந்திர உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதேபோல் பண்டைய திருமணங் களில் ஆணும், பெண்ணும் கூந்தலை முடி போட்டு தங்களின் திருமண பந்தத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேபோல் தம்பதியரிடையே ஆரோக்கியமான உறவு இருக்கும் பட்சத்தில் கூந்தல் வளர்ச்சியானது அதிகரிக்கிறது. அதேபோல் அதிக அளவில் கவலை ஏற்பட்டாலோ மன அழுத்தம் இருந்தாலோ கூந்தல் உதிரத் தொடங்குகிறது. நமது மன ஆரோக்கி யத் தோடும், உடல் ஆரோக்கியத்தோடும் தொடர்புடையதாக இருக்கிறது கூந்தல்.



# பச்சைப் பயறு சாப்பிடுங்கள்

பருப்பு வகைகளை அடிக்கடி உண்ணும் போது ஏராளமான சத்துக்கள் உடலுக்கு கிடைக்கின்றன.குறிப்பாக பருப்புக்களில் ஒன்றான பச்சை பயிறு மற்றும் பாசிப் பருப்பை தவறாமல் வாரம் ஒருமுறை உட்கொண்டு வந்தால், அதில் நிறைந்துள்ள சத்துக்களால் பல நன்மைகளை பெறலாம்.

பச்சை பயிறு உடலில் ஏற்படும் நோய்களை குணப்படுத்துவதோடு, சருமம் மற்றும் கூந்தல்.பிரச்சனைகளையும் சரி செய்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் .இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைக்கவும், கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கவும் பச்சை பயறு உதவுகிறது. எனவே அன்றாடம் பச்சை பயறு அல்லது பாசிப் பருப்பை உணவில் சேர்த்து வாருங்கள்.

சத்துக்கள் நிறைந்ததுபச்சை பயற்றில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது. நீங்கள் இரும்புச்சத்து குறைபாட்டினால் அவஸ்தைப்பட்டால், அன்றாட உணவில் பச்சை பயறை சேர்த்து வாருங்கள். இதனால் உடலுக்கு வேண்டிய இரும்புச்சத்து கிடைத்து, இரத்த சோகை ஏற்படும் வாய்ப்பில் இருந்து தப்பிக்கலாம்.

### சரும புற்றுநோய்

பச்சை பயறு சரும புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு அளிக்கும். அன்றாடம் வெளியில் அதிகம் சுற்றுவோர், உணவில் பாசிப்பருப்பு அல்லது பச்சை பயறை சேர்த்து வந்தால், சரும புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

### எடையைக் குறைக்கும்

உடல் பருமனைக் குறைக்கவும், உடல் எடையை சீராக பராமரிக்கவும், பச்சை பயறு பெரிதும் உதவியாக இருக்கும். இது நீண்ட நேரம் வயிற்றை நிறைவாக வைத்திருக்கும்.

உடல் எடையை குறைக்க முயற்சிப்போர், சப்பாத்தி சாப்பிடும் போது, அத்துடன் ஒருகிண்ணம் பச்சை பயறை சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் உடலுக்கு ஒரு நாளைக்கு வேண்டிய சத்துக்கள் கிடைப்பதுடன், உடல் எடையும் கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

# வாழ்த்துகிறோம்



நதியும் பெண்ணாய்
நாடும் தாயாய்
நிலவும் குமரியாய்
நீள்கடலும் அவளாய்

மொழிகளில் நீயாய்
முப்பெரும் தேவியாய்
பூக்களுக்கும் பெயராய்
பூமியும் இவளாய்

மகளிர் தினம் மட்டுமல்ல
மானுடம் உள்ளமட்டும்
வாழ்த்துகின்றோம் பெண்ணே
உன்னை!
வாழ்த்துகின்றோம் முன்னே
உன்னை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரற்ற கலைஞர் சார்லி சப்ளினின்



திரைப்படத்துறையில் தன்னிகரற்ற கலைஞரும், உலகுக்கே நம்பிக்கை யையும் நகைச்சுவையையும் வாரி வழங்கியவருமான சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளினின் பிறந்த தினம் கடந்த 16ஆம் திகதி.

அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

♦ லண்டனில் உள்ள வால்வோர்த் என்ற இடத்தில் பிறந்தவர் (1889). பெற்றோர் இசை அரங்குகளில் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். குடிப்பழக்கத்தால் சீரழிந்த தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்தார். இசை அரங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்று பார்வையாளர்களின் எதிர்பார்ப்புக்கு தாயால் ஈடுகொடுக்க முடியவில்லை.

♦ இதனால், ஐந்து வயது சிறுவன் சார்லியை முதலாவது மேடையில் ஏறினார். அவனும் ஆடிப்பாடி மற்றவர்களைப் போல பேசிக்காட்டி முதல் நாளன்றே ரசிகர் கூட்டத்தை வசியப்படுத்தி விட்டான்.

♦ சிறுவன் சார்லி, குடும்பத்தைக் காப்பாற்ற லண்டன் நகரில் உள்ள நாடகக் குழுக்களுக்கான ஒரு செயலாளரை சந்தித்து வாய்ப்புக் கோரினான். வாய்ப்பும் கிடைத்து. 1912இல் இந்தக் குழுவுடனான அமெரிக்கப் பயணம் திருப்புமுனையாக அமைந்தது.

♦ இளம் கலைஞரின் அபாரத் திறமையை உணர்ந்த கீ ஸ்டோன் சினிமா நிறுவனத் தயாரிப்பாளர் தனது நிறுவனத்தில் சேர்த்துக்கொண்டார். இவர் நடித்த முதல் மவுனத் திரைப்படம் 'மேக்கிங் ஏ லிவிங்' 1914இல் வெளிவந்தது. 'கிட் ஆட்டோ ரேசஸ்' இவரது இரண்டாவது படம். இதில் தொள தொள கால் சட்டை, சிறிய கோட்டு, ஹிட்லர் மீசை, சின்னத் தொப்பி, சிறு தடி என்ற கெட்டப்பில் இவரைப் பார்த்த உலகமே விழுந்து விழுந்து சிரித்தது. இதுவே பின்னர் இவரது அடையாளமானது. படம் பிரம்மாண்ட வெற்றியை ஈட்டியது.

♦ ஒரே வருடத்தில் 35 திரைப்படங்களில் நடித்தார். அனைத்துமே சாதனை படைத்தன. வெறும் நடிப்பு மட்டும் இல்லாமல், கதை, வசனம், இயக்கம், என அனைத்து துறைகளிலும் தன் தனி முத்திரையைப் பதித்தார். நடன அமைப்பு, இசையமைப்பையும்கூட இவர் விட்டுவைக்கவில்லை. பணமும், பெயரும் புகழும் குவிந்தன.

♦ 1919இல் 'யுனைடட் ஆர்டிஸ்ட்' என்ற 'ஸ்டுடியோ'வைத் தொடங்கினார். 1924இல் இவர் தயாரித்த திரைப்படம் 'தி கிட்' (The Kid) மகத்தான வெற்றி பெற்றது. தொடர்ந்து வெற்றி மேல் வெற்றிதான். சமகால சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து இவர் தயாரித்த சிறந்த திரைப்படங்களில் 'தி இமிகிரன்ட்' முதன்மையானது.

♦ இவரது நிறுவனம் படங்களைத் தயாரித்ததுடன் விநியோகமும் செய்தது. 1936 இல் மவுனப் பட யுகம் நிறைவடைந்து பேசும் படக்காலம் தொடங்கியது. மாடர்ன் டைம்ஸ் என்ற பேசும் படத்தைத் தயாரித்தார். இதில் இவர் பேசாமல்தான் நடித்தார். இந்தப் படமும் மகத்தான வெற்றி பெற்றது.

♦ படங்களில் இவர் பயன்படுத்திய நகைச்சுவை காட்சிகளைப் பயன்படுத்தாத உலகத் திரைப்படங்களே இல்லை என்று கூறிவிடலாம். மவுனப்படக் காலத்திலேயே உலகம் முழுவதும் பிரபலமான இவர் நடித்த படங்களின் விசிடிக்கள் இன்றும் உலகம் முழுவதும் விற்பனையாகின்றன.

♦ இவரது 'தி இம்மிகிரன்ட்', 'தி கிட், தி கோல்ட் ரஷ்', 'சிட்டி லைட்ஸ்', 'மாடர்ன் டைம்ஸ்', 'தி கிரேட் டிக்டேடர்' ஆகிய ஆறு திரைப்படங்கள் அமெரிக்காவின் 'நஷனல் ஃபிலிம் ரெஜிட்ரி' அமைப்பில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இரண்டு முறை ஆஸ்கர் சிறப்பு விருதுகளை வென்றுள்ளார்.

♦ இங்கிலாந்து அரசு 1985இல் இவரது உருவம் பொறிக்கப்பட்ட அஞ்சல் தலையை வெளியிட்டது. உலகையே சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து, ஹாலிவுட்டில் தனித்துவம் வாய்ந்த மேதையாக இன்றளவும் போற்றப்படும் சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளின் 1977இம் ஆண்டில் 88ஆவது வயதில் காலமானார்.

## உயிர் பெற...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களாகப் பதவி வகிக்கின்றனர். இந்த அரசின் முக்கிய ஆலோசகராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்க விளங்குகின்றார்.*

*இப்போது மஹிந்த ஆதரவாளர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை திசை திருப்பி, முடியாவிட்டால் பிளவு படுத்தி அரசாங்கத்தை நாடாளுமன்றத்தில் பலவீனப்படுத்துவதில் இறங்கியுள்ளனர். எனவே தான் இப்போது மைத்திரிபால சிறிசேன விழிப்படைந்து சதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 5 முன்னாள் அமைச்சர்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து வெளியேற்றியுள்ளார். இந்த நிலை மஹிந்த ஆதரவாளர்களுக்கு ஒரு பலத்த அடியாக இருந்தபோதிலும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை வைத்து அரசாங்கத்தை ஈடாட வைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.*

*அதாவது, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19 ஆவது திருத்தச் சட்டத்தையும், தொகுதிவாரித் தேர்தல் முறையையும் ஒன்றாக நிறைவேற்ற வேண்டுமென ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். தொகுதி வாரித் தேர்தல் முறையில் தாம் அதிகாரத்தைக் கைப்பற்றி மஹிந்தவை பிரதமராக்கி ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என நம்புகின்றனர். மைத்திரிபாலவும் வளர்ந்து வரும் மஹிந்த ஆதரவைக் கட்டுப்படுத்த அதிரடி நடவடிக்கையாகக் கட்சி மத்திய செயற்குழுவிலிருந்து சிலரை வெளியேற்றியுள்ளார்.*

*அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஒரு பனிப்போர் உருவாகி முனைப்படைந்து வருகிறது. இது மீண்டும் மஹிந்தவும் அவரின் ஆதரவாளர்களும் அதிகாரத்துக்கு வருவதை விரும்புபவர்களுக்கும்; எதிர்ப்பவர்களுக்கும் இடையிலான போராக வெடிக்கும் என்பதில் ஐயமில்லை.* ***

## சிம்மக்குரலோனின்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கியது; ஒதுக்கியது? ஒரு தாய் பொற்கிண்ணத்தில் நெய் சாதத்தை பிசைந்து குழந்தைக்கு ஊட்ட வருகிறாள். அதை சாப்பிட்டு, சாப்பிட்டு அலுத்துப்போன குழந்தை வேண்டாம் போ! என்று போக்குக்காட்டி ஓடுகிறது. ஓடியது. தாயின் ஸ்தானத்தில் நின்றுதான் கம்யூனிஸ்ட் கட்சி எனக்கு அமிழ்தூட்டியது. ஆங்கிலம், பிரஞ்சு, லத்தீன் என உலகத்தில் எத்தனை மொழிகள் உள்ளதோ அதையெல்லாம் கற்றுக் கொள்ளும்படி ஆசிரியர்களை அமர்த்தியது. உலக நாடுகளுக்கெல்லாம் போய்வரும்படி அனுமதித்தது. நான்தான் மாட்டேன் போ என்று குழந்தையின் ஸ்தானத்தில் துள்ளி ஓடினேன். அப்படியிருக்கையில் எப்படி நான் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கப்பட்டவனாகவோ, தாய்க்கு பிள்ளையல்லாதவனாகவோ ஆவேன்?' என்று திருப்பிக் கேட்டார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு கோவை விடுதி ஒன்றில் பாரதீய ஞானபீடம் பெற்ற ஜெயகாந்தனுக்கு பாராட்டு விழா நடந்தது. அந்த விழாவிற்கு முன்புதான் ஒரு விழாவில் சமஸ்கிருதம் தான் அறிந்த மொழிகளிலே சிறந்த மொழி என்று பொருள்பட பேசி சர்ச்சையை கிளப்பியிருந்தார் ஜெயகாந்தன். அதை முன்னிட்டு பகுத்தறிவு பாசறை தோழர்கள் அவருக்கு கடும் எதிர்ப்புக் காட்டி வந்தனர்.

கோவை விழாவில் ஜெயகாந்தன் தமிழில் பேச்சை ஆரம்பித்தபோது, 'ஜெயகாந்தா.. தமிழில் பேசாதே, சமஸ்கிருதத்தில் பேசு...! என்று ஒருமையில் ஜெயகாந்தனை நோக்கி, பெரியாரிஸ்ட் தோழர்கள் கத்த ஆரம்பித்தனர். தொடர்ந்து நோட்டீஸ் விநியோகித்தும், ஜெயகாந்தனை நோக்கி பாய்ந்து சென்று மைக்கை பிடுங்கி ரகளையில் ஈடுபடும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

அப்போதும் அந்த சிம்மக்குரலோன் கர்ஜனை ததும்பத் தீர்க்கமான பார்வையுடன் மைக்கின் முன் அசராது நின்றிருந்தார். தமிழில்தான் பேசுவேன். அதுதான் என் தாய்மொழி! என்றார் கர்ஜனை மாறாமல். பாதுகாவலர்கள் வந்து போராளிகளை அப்புறப்படுத்தின பின்பு மேடையில் பேசிய ஜெயகாந்தன், "எனக்கு தமிழ் தான் தெரியும். தொட்டிலில் குழந்தையாக தவழ்ந்தபோதே எனக்குத் தமிழ்தான் தெரிந்தது. எனது தாய் தமிழில் தாலாட்டியதால் தமிழ் அறிந்தேன். என்னை நான் இந்தியாவைச் சேர்ந்த தமிழன் என்று கூறிக் கொள்ளவே ஆசைப்படுகிறேன்.

இந்தி, ஆங்கிலமும் நாம் படிக்க வேண்டும். அப்போது தான் அகண்ட பாரத்தில் தமிழின் பெருமையை நாம் உணர்த்த முடியும். அரசியலுக்காக இந்தி, சமஸ்கிருதம் படிக்காதே என்று எதிர்த்துவிட்டு பின்னர் பதவிக்காக மண்டியிடுபவன் அல்ல நான்.

இமயத்தின் உச்சியில் நின்று தமிழின் புகழைக் கொக்கரித்த பாரதி, அண்ணா போன்ற தமிழ் அறிஞர்களையே எதிர்த்தவர்கள் தமிழர்கள். அதுபோலத்தான் என்னையும் எதிர்க்கிறார்கள். தமிழனுக்கு என்று தனிக் குணம் உண்டு என்று பாடி வைத்தவர் நாமக்கல் கவிஞர். வாழ்க்கையில் எதிர்மறைகள் இருந்தால்தான் வாழ்க்கை சுவராஸ்மானதாக இருக்கிறது. ஜாதிகள் ஒழிய வேண்டும். ஜாதிகள் கூடாது என்பது லட்சிய நோக்காளர்களின் கருத்து. ஜாதிகளே இல்லையென்றால் வாழ்க்கை சுவாரஸ்மானதாக இருக்காது என்று சொல்ல எனக்கு சுதந்திரம் இல்லையா? மாற்றுக்கருத்துக்களும், தேடல்களும்தான் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டிருக்கின்றன.


நான் கூறிய கருத்து மற்றவர்களின் மனதை புண்படுத்தியிருந்தால் மன்னிப்பு கேட்கிறேன். ஆனால் எனது கருத்தில் எந்த மாற்றமும் கிடையாது!" என்று ஆணியடித்த மாதிரி மேலும் சர்ச்சைகளையே கிளப்பிய ஜெயகாந்தனை அங்கு தரிசிக்க நேர்ந்தது.

ஆம்... சமூக நலனுக்காக மட்டுமே சர்ச்சைகளை கிளப்பி, அந்த சர்ச்சைகளுக்குள்ளேயே தைரியமாக நின்று, பிறிதொரு சர்ச்சையையும் கிளப்பி விட்டு சர்ச்சைகளின் நாயகனாக ஒரு எழுத்தாளன் நின்றிருந்தானென்றால், அது ஜெயகாந்தனை தவிர வேறொருவர் இருக்கவே முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நந்தன்



# வடக்கின் மக்கள் பிரதிநிதித்துவம் தேய்ந்து போகும் போக்கில்....!

எல்லோரும் எதிர்பார்த்தபடி தேர்தல் ஒன்று நடக்கப்போவது உறுதியாகி விட்டது. வெசாக் பண்டிகை முடிந்த கையோடு நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். தேர்தல் ஜூன் 27ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் தேர்தல் முறையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, தொகுதி ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் விகிதாசார முறையும் உள்ளடக்கப்பட்டு, ஒரு கலப்புத் தேர்தல் வடிவத்தில் நடாத்தப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இலிருந்து இனி உறுப்பினர்களின் எண்ணிக்கை 249 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் தினேஸ் குணவர்த்தனா தலைமையிலான தேர்தல் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை, தூசி தட்டி எடுக்கப்பட்டு சில மாற்றங்களுடன் தற்போது சீர் திருத்தமாக வெளிவரவுள்ளதாக நம்பகமாக அறியக் கூடியதாக உள்ளது.

தொகுதி ரீதியாக 160 உறுப்பினர் களும் மாவட்ட ரீதியாக 60 உறுப் பினர்களும் விகிதாசார முறைப்படி 29 உறுப்பினர்களும் மொத்தம் 249 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாக உள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை பத்து இலட்சம் வாக்காளர்களால் குறைவடைந்துள்ளது. இந்தியா, கனடா, சுவிஸ், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்படி மாவட்டங்களிலி ருந்து மக்கள் புலம் பெயர்ந்தமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமக்குக் கிடைக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை 10இனால் குறைவடைகின்றது.

தற்போதுள்ள வாக்காளர் எண்ணிக்கையின்படி கிளிநொச்சி தேர்தல் தொகுதியை விட யாழ் மாவட்டத்தின் எந்தத் தொகுதியிலும் தனித்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்யக்கூடிய வாக்காளர் எண்ணிக்கை இல்லை. எனவே தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதன் பிரகாரம்

01.வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதிகள் ஒன்றாகவும்

02.மானிப்பாய் காங்கேசன்துறை தேர்தல் தொகுதிகள் ஒன்றாகவும்

03.நல்லூர் யாழ்ப்பாணம் இணைக்கப்பட்டு ஒரு தேர்தல் தொகுதியாகவும்

04.உடுப்பிட்டி பருத்தித்துறை இணைக்கப்பட்டு ஒரு தேர்தல் தொகுதியாகவும்

05.கோப்பாய் சாவகச்சேரி இணைக்கப்பட்டு ஒரு தேர்தல் தொகுதியாகவும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 தேர்தல் தொகுதிகளும் கிளிநொச்சி மாவட்டம் ஒரு தேர்தல் தொகுதியாக மொத்தம் 6 தேர்தல் தொகுதிகள் யாழ்ப்பாண கிளிநொச்சி மாவட்டங்களில் அடங்குகின்றன. இந்த எண்ணிக்கை மேலும் குறைவடைய வாய்ப்புக்கள் உள்ள போதும் சிறுபான்மையினரின் நன்மை கருதி நெகிழ்ச்சித்தன்மை காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மலையகத்தில் பதுளை, நுவரெலியா, கண்டி ஆகிய தேர்தல் தொகுதிகளில் சிறுபான்மையினர் தெரிவு செய்யப்படக்கூடிய வகையில் இரட்டை அங்கத்தவர் அல்லது மூன்று அங்கத்தவர்கள் தொகுதிகளாக மாற்றம் அடையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அறிய முடிகின்றது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் திரும்பி வரும் வரையில் யாழ்ப்பாணம் கிளி நொச்சி மாவட்டங் களின் தேர்தல் தொகுதிகள் அதிகரிக் கப்போவதில்லை. மேலும் போரினால் இறந்தோர் தொகையும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. எம்மிடையே உள்ள குடும்பக்கட்டுப்பாடும் அன்புக்கொன்று ஆசைக்கொன்று என கட்டுப்படுத்துவதாலும் தமிழர்களின் எண்ணிக்கை இலங்கையில் வீழ்ச்சியடையப் போகின்றது. இஸ்லாமிய சோதரர்களின் எண்ணிக்கை இன்னும் 10 வருடங்களில், இலங்கையில் சிங்களச் சோதரர்களுக்கு அடுத்த நிலையில் விளங்கப் போவதை புள்ளி விபரங்கள் முன் இயம்புகின்றன. மாவட்ட ரீதியாக 2 நாடாளுமன்ற உறுப்பினர் என மொத்தம் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு கிடைக்கவுள்ளது.

தேர்தல் சீர்திருத்தங்கள் ஒரு புறம் இருக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மேலும் புதிய முகங்களை அறிமுகம் செய்ய கூட்டமைப்பின் தலைமை பச்சைக் கொடி காட்டியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. கொழும்பு சட்டக்கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் ஒருவரும், முன்னாள் பத்திரிகையாளர் ஒருவரும், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமாகிய ஒருவர் என மூவர் களமிறங்கவுள்ளதாக அரசல் புரசலாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் வாக்காளர்களைப் பொறுத்த வரையில் ஒரு இக்கட்டான நிலையில் முடிவெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். வடிவேலு பாணியில், வரும் ஆனால் வராது என்று சொல்வதைத் தவிர வேறொன்றுமில்லை.

**புலம் பெயர்ந்த தமிழர்கள் திரும்பி வரும் வரையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங் களின் தேர்தல் தொகுதிகள் அதிகரிக்கப் போவ தில்லை. மேலும் போரினால் இறந்தோர் தொகை யும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. எம்மிடையே உள்ள குடும்பக்கட்டுப்பாடும் அன்புக் கொன்று ஆசைக்கொன்று என கட்டுப்படுத்துவதா லும் தமிழர்களின் எண்ணிக்கை இலங்கையில் வீழ்ச்சியடையப் போகின்றது. இஸ்லாமிய சோதரர் களின் எண்ணிக்கை இன்னும் 10 வருடங்களில், இலங்கையில் சிங்களச் சோதரர்களுக்கு அடுத்த நிலையில் விளங்கப் போவதை புள்ளி விபரங்கள் முன் இயம்புகின்றன.**

எமது நாடாளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி அடைகின்ற பொழுது, தொழில் வாய்ப்புகள், அபிவிருத்தி, பொருளாதார நடவடிக்கைகள், பல்கலைக்கழக அனுமதி எல்லாவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது. எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் நாம் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை என்றே தோன்றுகிறது.

இது யாழ்ப்பாண கிளிநொச்சி மாவட்டத்தின் நிலையாகும்.

வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகியவை இடம்பெறுகின்றன. 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி ரீதியாகவும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

வன்னி மாவட்ட தேர்தல் தொகுதிகளில் நடாத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களால் வெலிஓயா, கொக்குத் தொடுவாய் மற்றும் மன்னார், வவுனியா தெற்கு, வடக்கு ஆகிய இடங்களில் நடைபெற்ற குடியேற்றங்களாலும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தெரிவாகக் கூடிய ஏது நிலையே காணப்படுகிறது. மாவட்ட ரீதியிலும் விகிதாசார முறையிலும் இந்தநிலையே காணப்படும். இந்த வகையில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடையக்கூடிய நிலையே காணப்படுகிறது. கிழக்கு மாகாணத்தின் நிலைமையும் இது தான். திருகோணமலையில் மிகக் கஷ்டமான ஒரு சூழ்நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று செயற்படுமானால் நிலைமை விபரீதமாகி விடும். எனவே தமிழ்க்கட்சிகள் தூர நோக்குடன் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**22.04.2015 ~28.04.2015**

### மேஷம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சமூகத்தில் பெரியவர்களைச் சந்திப்பீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் ஒத்துழைப்புடன் நடந்து கொள்வீர்கள். அவர்களின் பாராட்டுக்களைப் பெற்று கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த ஒத்துழைப்பைப் பெறுவீர்கள், விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும். பழைய கடன்கள் அனைத்தும் வசூலாகும். மாணவமணிகள் படிப்பிலும் விளையாட்டிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோர்களின் ஆதரவுடன் கோரிக்கைகள் நிறைவேறும்.

### ரிஷபம்



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

திருப்திகரமான வாரம். பொருளாதார வளம் உயரும். புதிய திட்டங்களைத் தீட்டி செய்தொழிலை மேன்மையடையச் செய்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவும், நட்பும் கிடைக்கும். வியாபாரிகள் நல்ல லாபத்தை அடைவீர்கள். புதிய விற்பனை முறைகளைப் புகுத்தி, பொருட்களின் விற்பனையைப் பல மடங்கு பெருக்குவீர்கள். விவசாயிகளுக்கு வருமானம் உயரும். சந்தையில் நிலவும் போட்டிகளைச் சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். பெண்மணிகளுக்கு குடும்பத்தினரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். மாணவமணிகளின் விருப்பத்தை பெற்றோர் நிறைவேற்றுவர். ஆசிரியர்களும் அனுகூலமாக இருப்பார்கள்.

### மிதுனம்



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சந்தோஷமான வாரம். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி வாகை சூடுவீர்கள். பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். மேலதிகாரிகள் உங்களுக்குப் பக்க பலமாக இருப்பார்கள். வியாபாரிகளுக்கு பொருட்களின் விற்பனை நல்ல முறையில் நடக்கும். அதனால் புதிய சந்தைகளை நாடிச் செல்வீர்கள். விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் கிடைக்கும். அதனால் புதிய வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பெண்மணிகளுக்கு கணவருடனான ஒற்றுமை நன்றாக இருக்கும்.

### கடகம்



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள். தேவைக்கேற்ற பணவரவு கிடைத்துவிடும். அரசியல்வாதிகள் எடுத்த காரியங்கள் அனைத்தையும் சுலபமாக முடித்துவிடுவீர்கள். கலைத்துறையினர் பல தடைகளைத் தாண்டி புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள். பெண்மணிகள் உறவினர்களை அரவணைத்துச் செல்லுங்கள். மாணவமணிகளின் கோரிக்கைகள் நிறைவேறும். தேவையில்லாத பிரச்னைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம்.

### சிம்மம்



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் தடையின்றி வந்து கொண்டிருக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும். வியாபாரிகள் புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். கூட்டாளிகளே உங்களுக்குப் போட்டியாக இருப்பார்கள். விவசாயிகளுக்கு கொள்முதல் சற்று மந்தமாக இருக்கும். கால்நடைகளின் பராமரிப்புச் செலவுகளும் கூடும். மாணவமணிகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

### கன்னி



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

வாகனத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால், பயணமுறை எளிதாகும். சேமிப்பு பணம், அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களை விமர்சிக்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணச் செலவுகளை சிக்கனமாக மேற்கொள்வது நல்லது. பெண்கள், சமையலறைப் பணிகளில் கவனமுடன் ஈடுபட வேண்டும்.

### துலாம்



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

வாகன பயன்பாடு, சராசரி அளவில் இருக்கும். மகளின் ஜாதகயோக பலன், புதிய சொத்து வாங்குவதற்கு உதவியாக இருக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலை வாய்ப்பு, சன்மான உயர்வு கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க, தேவையான பணி மேற்கொள்வர். மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர, பிற விஷயத்தில் விவாதம் வேண்டாம்.

### விருச்சிகம்



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். புத்திரரின் மனக்குறையை கனிந்த மனதுடன் சரி செய்வீர்கள். எதிரியால் தொல்லை அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். இல்லறத்துணை, உங்களின் அரிய செயல்களை மனமுவந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். அரசு தொடர்பான உதவி பெறலாம். பணியாளர்கள் பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றுவர்.

### தனுசு



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

வீடு, வாகனத்தில் உரிய பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரின் உடல்நலத்துக்கு சிறுஅளவில், மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை நல் ஆலோசனை வழங்கி, உங்களின் செயல் பரிமளிக்க உதவுவார். தொழில், வியாபாரத்தில் போட்டியை திறம்பட சமாளிப்பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம், கூடுதல் அக்கறையுடன் பின்பற்ற வேண்டும். பெண்கள், குடும்ப பணவசதிக்கேற்ப ஆடை, அணிகலன் வாங்குவர்.

### மகரம்



**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை வளரும். புத்திரர், தகுதி, திறமையில் முன்னேற்றம் அடைவர். சொத்து தொடர்பான ஆவணம், கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இல்லறத்துணை உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பெண்கள், சேமிப்பு பணத்தை குடும்பத்தின் சிறுசெலவுகளுக்காக பயன்படுத்துவர். மாணவர்கள், புதியவரை நண்பராக கருதி, பழகுவதில் நிதானம் வேண்டும்.

### கும்பம்



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

இதனால், சிலரது விமர்சனத்தை எதிர்கொள்ள நேரிடலாம். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். புத்திரர், நண்பருக்கு இணையாக உங்களிடம் சகஜமாக பழகுவார். நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, கூடுதல் அன்பு, பாசம் மனதில் உற்சாகம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய திட்டம் உருவாக்குவீர்கள்.

### மீனம்



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர் விரும்பிய உணவு வகை வாங்கித் தருவீர்கள். கண் தொடர்பான பிணிக்கு, உடனடி மருத்துவ சிகிச்சை நன்மை தரும். இல்லறத்துணை, தன் கடமை உணர்ந்து செயல்படுவார். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில், அரசின் சட்டதிட்டம் மதித்து செயல்படவேண்டும். இயந்திர தொழிற்சாலை பணியாளர் பாதுகாப்பு முறை, தவறாமல் பின்பற்றவும். பெண்கள், கணவரின் வாழ்வியல் சிரமம் நீங்க உதவுவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 83

● அடேல் பாலசிங்கம்



சமையல் அறையை எப்படி ஒற்றி எடுக்கலாம் என்று, புதிய சிறந்த வழிகளைச் சோதித்துப் பார்ப்பதே தனிக்கலையாகும். இறுதியில் இலகுவான வழி, சமையல் முடிந்த சட்டி பானைகளை வெளியே தூக்கிச் சென்று, ஒரு சிறிய குந்திலே அமர்ந்து , பாத்திரங்களுக்குச் சவர்க்காரம் போட்டு, கழுவி எடுத்து, கொதிக்கும் வெயிலில் கவிழ்த்துக் காய விடுவதே சிறந்த வழி என்பதை பட்டறிந்து கொண்டேன். காய்ந்த பின் அவற்றைச் சமையல் கட்டில் அடுக்கி விடுவேன்.


மேல் வீட்டுக் குளியல் அறைக்கு நீர் சுமப்பது மேலும் ஒரு பிரச்சினையாகியது. ஒரு வாளி நீரில் என்னை ஒற்றி எடுப்பது எனக்குக் கிடைத்த அதிஷ்டம். நீர்ப்பிரச்சினை எனக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது உண்மையே . ஆனால் தங்கள் குடும்பத்தின் அடிப்படைத் தேவைக்கான இந்தப் பண்டத்தைப் பெறுவதில் தங்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிடும் பல இலட்சக்கணக்காக இந்தியப் பெண்களோடு ஒப்பிடும் போது நான் கொடுத்து வைத்தவள் என்பேன்.

நீர்ப்பிரச்சினை இருக்கிறதோ, இல்லையோ, வீட்டு வேலை என்று வரும் போது அது இந்தியாவில் ஒரு பெரும் சுமையே ஆகும். சமையல் ஒரு பெரிய வேலை. பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட தொல்லை. தேங்காய் துருவி,ஈர வெங்காயம் உரித்து , இறைச்சி வெட்டி, மீன் துப்பரவாக்கி, காய்கறி நறுக்கி, சோறு காய்ச்சி, வடித்து இப்படி சமையல் வேலையே நாள்தோறும். அடுத்தடுத்து , மாற்றம் இல்லாமல் செய்து கொண்டிருப்பது சலிப்புத் தருவதாகும். இனி சமையலுக்கு நீண்ட நேரம் பிடிக்கும். சமையலுக்கு வாயு அடுப்பே பொதுவாகப் பயன்படுத்தப்படும். அதில் இரண்டு நெருப்பு முனைகளே இருக்கும். அரிசியின் தரத்துக்கு ஏற்ப,சோறு காய்ச்ச,ஒரு நெருப்பு முனை அரைமணி நேரம் பயன்படுத்தப்படும். அனைத்துக் கறி வகைகளையும் தயாராக்க மீதமாக ஒரு முனை மட்டும் இருக்கும். வேறு வாய்ப்பு என்றால் அது, விறகு அடுப்பே. பெரும்பாலும் ஒன்றிரண்டு விறகடுப்புகளைக் காணலாம். சமையல் என்பது உணவு தயாரிப்பில் ஒரு பகுதி மட்டுமே. ஆனால் இது முழுக்க முழுக்க ஒரு பெண்ணின் பணியே ஆகும். இதை விட , அரிசியை ஊறவிட்டு; மா அரைப்பது; மா இடிப்பது; மிளகாய்த்தூள் சரக்குகள் வறுப்பது; தானியங்களை ஊற வைத்து அம்மியில் அரைப்பது; இப்படிப் பல! நாம் இந்தியாவில் இருந்த காலத்தில் ஆடை கழுவும் பொறி வசதி எமக்குக் கிடைக்கவில்லை. கைகளாலேயே எமது உடைகளைக் குளிர் நீரில் கழுவ வேண்டும். எனக்குப் பஞ்சியாக இருந்தால், அல்லது நீர்த்தட்டுப்பாடு நிலவினால் , ஒவ்வொரு வாரமும் குறித்த நாளில் வீடு வரும் ஒரு பெண்மணியிடம் எனது ஆடைகளையும், பாலாவின் சட்டைகளையும் ஒப்படைப்பேன்.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிந்தி விடாதே !

அடி என்னவளே ! -உன்
கருவிழி மேகங்கள்
கண்ணுக்குள் மோதிக்கொண்டு
கருங்குளத்து நீர்
கன்னங்களில் வழியும் பொது - என்

இதயக் குளத்தின்
செந்நீர் சிதறி
சாலையில் ஓடுதடி- என்னை
சோகத்தில் வாட்டுதடி.

வழிகின்ற நீர் - உன்
வாய்க் கமலத்தில்
வடிந்து விட்டால் - நீ
மகிழ்ச்சியால் சற்று சிரித்து விட்டால் - என்

இதயத்தின் நீரெல்லாம்
ஓட மறுத்து
ஒரு நிமிடம் உறைந்து
உன் அழகை ரசிக்குதடி
உன்னை முத்தமிடத் துடிக்குதடி

கண்கள் தான் காதலின் பிறப்பிடம்
கவிஞர்கள் சொல்கிறார்கள் - உன்
கண்ணீரல்லவா என் உயிரின் இருப்பிடம்
நான் சொல்கிறேன்.

சிந்தி விடாதே - என் செல்லமே !
கண்ணீரை மட்டுமல்ல - என்
காதலையம் தான்.

-நிர்வாணி



## நீ வேண்டும்

அழுவதற்கு உன் மடி வேண்டும்.
அணைப்பதற்கு
உன் கைகள் வேண்டும்.
அள்ள அள்ளக் குறையாத உன்
அன்பு வேண்டும்.
எல்லா வற்றையும் விட நீ
எனக்கு வேண்டும்.
உன் அன்புக்காய் ஏங்கும் எனக்கு
அனாதையில்லை என்று சொல்ல
நீ எனக்கு வேண்டும்.

-ஹரன்

## எம் தாய் திரு நாட்டில் ....

வெக்கை
வெயிலில்,
ஆழமாக அடிவயிறு
பசியில் தாளமாக.,
பிஞ்சுக் குழந்தை

உண்ணும் உணவிற்கு,
மொட்டை வெயிலில்
சலங்கை கட்டி ஆடிய
கோலமாக .,

ஒருவேளை கூட பசியாறாத,
பிச்சைக்கார குழந்தை
வயிறு பாலமாக .,
இருப்பிடம் இன்றி
உழைப்பிடம் தேடி,
ஓடி சென்ற
பாமரக்குழந்தை தண்ணீர்
இன்றி
தாகமாக .,

பேருந்து சன்னல் ஓரம்
பெயர் இல்லா
கடவுள் குழந்தையின்
வாழ்க்கை சோகமாய்
போனதே..
யாம் பிறந்த
பாரதத்தில் ... !

-தமிழ்

## ஏன் திருடினாய்?

நான் கண்ணாடியை
பார்த்ததும்
கண்ணாடியின்
பிம்பம் என்னை
திட்டுகிறது
ஏன் அவள்
இதயத்தை
திருடினாய் என்று....!!!

## பசி...

சாப்பிட்டேன் என
அம்மாவிடமும்,
கவலைப்படவில்லை என
அப்பாவிடமும்,
அடுத்த மாதத்திற்குள்
வேலை வாங்கிவிடுவேன் என
அண்ணனிடமும்,
முதல் மாதச் சம்பளத்தில்
உனக்கொரு மடிக்கணினி என
தங்கையிடமும் சொல்ல
முடிந்தது..

காலையிலிருந்து சாப்பிடல...
ரொம்பப் பசிக்குதுடா,
எதாவது வாங்கிக்கொடு என
நண்பனிடம்
மட்டும் தான் கேட்க
முடிந்தது.....

-கலைவாணி



## ஆசைகள்

சின்னச் சின்ன
ஆசைகள்
நிறைவேற புத்தனிடம்
கேட்டேன்
எதன்மீதும் ஆசைப்படாதே
என்று போதனை செய்தார்
புத்தனின் போதனைப்படிதான்
நடக்கிறேன்
நிறைவேறா ஆசைகளில் மட்டும்..!

-மைதிலி



## நீயாக ...

யாரோ வருவது போல்
ஒரு அரவம்..............
யாரோ பேசுவது போல்
ஒரு சத்தம்..............
யாரோ சிரிப்பது போல்
ஒரு ஒலி....................
திரும்பி பார்க்கிறேன் - நான்
மீண்டும் மீண்டும்............
அது நீயாக
இருக்க வேண்டும் என்று
கடவுளிடம் வேண்டியவாறு.

-வந்தனா

## நீ வேண்டும்

அழுவதற்கு உன் மடி வேண்டும்.
அணைப்பதற்கு
உன் கைகள் வேண்டும்.
அள்ள அள்ளக் குறையாத உன்
அன்பு வேண்டும்.
எல்லா வற்றையும் விட நீ
எனக்கு வேண்டும்.
உன் அன்புக்காய்
ஏங்கும் எனக்கு
அனாதையில்லை
என்று சொல்ல
நீ எனக்கு வேண்டும்.

-வேல்நந்தன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருந்து வென்ற ஈரான்

தற்காலத்தில் இராஜதந்திரப் பேச்சு வார்த்தை என்பது ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து இருவருக்கும் வெற்றி என்ற நிலையில் முடிப்பது என்றாகி விட்டது. உலகின் ஐந்து வல்லரசுகளோடு ஜேர்மனியும் சேர்ந்து ஒரு புறமுமாகவும் ஈரான் மறுபுறமுமாக இருந்து நடத்திய பேச்சு வார்த்தையில் ஈரான் தனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு முடிவை எட்டியுள்ளது. ஈரான் எமக்கு ஒரு பாடத்தை இங்கு போதிக்கின்றது. பேச்சு வார்த்தை என்பது வலியவர்கள் கொடுப்பதை மட்டும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்வது மல்ல; வலியவர் என்னை நீ நம்புகிறாயா எனக் கேட்கும் போது மற்றவர்கள் மாடு போல் தலையாட்டுவதுமல்ல என்பதை தமிழர்களின் தலைவர்கள் எனத் தம்மைச் சொல்லுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



### உடன்படிக்கை தொடர்பாக உடன்பாடு

ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய ஐந்து வல்லரசு நாடுகளும் ஜேர்மனியும் இணைந்து ஈரானின் அணுக்குண்டு உற்பத்திக்கான யூரேனியப் பதப்படுத்துதலை நிறுத்துவது தொடர்பாக ஒரு தொடர் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளன. 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி ஈரானுடன் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கை எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பாகவே இப்போது சுவிட்சர்லாந்து நகரான லௌசானின் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இன்றுவரை ஈரான் தான் யூரேனியம் பதப்படுத்துவது சமாதான நோக்கங்களுக்கு மட்டுமே அணுகுண்டு தயாரிப்பதற்கு அல்ல என அடித்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

### சவுதி ஒரு புறம் இஸ்ரேல் மறுபுறம்

ஈரானின் அணுகுண்டு உற்பத்தி தொடர்பாக இஸ்ரேல் மட்டுமல்ல சவுதி அரேபியாவும் அதிக கரிசனை கொண்டிருந்தது. ஈரான் அணுக்குண்டு உற்பத்தி செய்தால் சவுதி அரேபியாவும் பாகிஸ்தானின் உதவியுடன் அணுக்குண்டுகளை உற்பத்தி செய்யலாம் என அஞ்சப்பட்டது. இதனால் ஒரு அணுப் படைக்கலப் பரவலாக்கம் மேற்காசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் ஏற்படலாம் எனவும் அஞ்சப்பட்டது . லிபியா, துனிசியா, அல்ஜீரியா, பாஹ்ரேன், எகிப்து ஆகிய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து சவுதி அரேபியாவின் முக்கிய எரிபொருள் வளப் பிரதேசங்களைத் தான் கைப்பற்ற வேண்டும் என்ற கனவு ஈரானிய மதவாத ஆட்சியாளர்களுக்கு உண்டு என சவுதி அரேபியா கருதுகின்றது. ஈரானின் இந்தக் கனவை அது அணுக்குண்டு மூலம் சாதிக்க நினைக்கிறது என்று சவுதி அஞ்சுகிறது. இதனால் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தது போல் ஈரானையும் ஆக்கிரமிக்க வேண்டும் என சவுதி விரும்பியது.

### ஈரானைத் தாக்கத் திட்டம்

ஈரானின் எல்லா பதப்படுத்தப்பட்ட யூரேனிய இருப்பையும் அழிக்க வேண்டும் என சவுதியும் இஸ்ரேலும் இரகசியமாக ஆலோசனை நடத்தின. சியா முஸ்லிம் நாடான ஈரான் அணுகுண்டு உற்பத்தி செய்வதையிட்டு சுனி முஸ்லிம் நாடான சவுதி அரேபியா இஸ்ரேலிலும் பார்க்க அதிக கரிசனை கொண்டிருந்தது. இஸ்ரேலும் சவுதியும் ஈரானுக்கும் மேற்குலகுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டால் அது தமது நாடுகளுக்கு ஆபத்தாக அமையும் என அஞ்சின. ஈரான் அணுகுண்டைத் தயாரித்தால் முதலில் சவுதியில் இருக்கும் புனித நகர்களான மக்காவையும் மதீனாவையும் கைப்பற்றுவதே ஈரானின் செயலாக இருக்குமென அவர்கள் அஞ்சினர். இதனால் சவுதியும் இஸ்ரேலும் இரகசியமாக இணைந்து ஈரானின் அணு ஆய்வு நிலைகளைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. சவுதி அரேபியாவின் வான் பரப்பினூடாக பறந்து சென்று ஈரான் மீது தாக்குதல் நடத்துவது இஸ்ரேலுக்கு பெரும் வாய்ப்பாக அமையும். சவுதி அரேபிய விமானத் தளங்களைப் பாவித்தால் இஸ்ரேலுக்கு ஈரானிய யூரேனியப் பதப்படுத்தும் நிலையங்களைத் தாக்குவது மேலும் இலகுவாகும். 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலிய விமானங்கள் சவுதி அரேபிய வான் பரப்பினூடாகப் பறந்து சென்று ஈராக்கின் அணு ஆராய்ச்சி நிலைகளைத் தாக்கி அழித்தன. மலைகளும் பாறைகளும் நிறைந்த ஐந்து இடங்களில் ஈரான் தனது யூரேனியம் பதப்படுத்தும் நிலையங்களை அமைத்துள்ளது. அந்த ஆழத்துக்கு துளைத்துச் செல்லக் கூடிய குண்டுகளை ஏற்கனவே இஸ்ரேல் உருவாக்கி விட்டதா அல்லது அமெரிக்காவிடமிருந்தோ அல்லது பிரான்ஸிடமிருந்தோ அவற்றை வாங்கிவிட்டதா என்பது ஒரு கேள்வியாக இருந்தது. இஸ்ரேலிய உளவுத் துறையான மொசாட் ஏற்கனவே சவுதித் தலைநகர் ரியாத்தில் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன. ரஷ்ய ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த ஈரானிய அரசியல் ஆய்வாளர் செய்யது முகமமது மராண்டி இஸ்ரேலும் சவுதியும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் இரு நாடுகளுக்கும் பதிலடி கொடுப்பதுடன் உலகப் பொருளாதாரத்தின் மீதும் பெரும் அடி விழும் எனவும் எச்சரித்திருந்தார்.

### மரதன் பேச்சு வார்த்தை

ஈரானின் யூரேனியப் பதப்படுத்துதலை நிறுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் கடந்த 13 ஆண்டுகளாக நடைபெற்றன. ஈரானின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு அது தொடர்ச்சியாக இறுக்கப்பட்டது. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை 1979 ஆம் ஆண்டு ஈரானில் மன்னர் ஷா ஆட்சியில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டதில் இருந்து ஆரம்பமானது. தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் பில் கிளிண்டன் தனது ஆணை மூலம் ஈரானில் அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குத் தடை விதித்தார். 1996 ஆம் ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றத்தின் மக்களவை ஈரானில் முதலீடு செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்தன. ஈரானின் யூரேனியம் பதப்படுத்தலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் ஈரானுடன் அணு உற்பத்தி தொடர்பான எந்தவித வர்த்தகமும் செய்யக் கூடாது என்ற தடை 2006 ஆம் ஆண்டு விதிக்கப்பட்டது. இந்தத்தடை 2007 ஆம் ஆண்டு மேலும் இறுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியது. ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஈரானுக்கு எதிராக 2008 ஆம் 2010 ஆம் ஆண்டுகளில் மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்கா ஈரானின் வங்கிகள் மீது தடை விதித்தது. ஐக்கிய அமெரிக்காவுடன் பிரித்தானியாவும் கனடாவும் இணைந்து கொண்டன. இவற்றால் ஈரானியப் பொருளாதாரம் பெரும் பாதிப்பு உள்ளானது.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவைப் பொறுத்தவரை அவர் ஈரானுடன் ஒரு போரை விரும்பவில்லை. ஈரானை அணுக்குண்டு தயாரிப்பதில் இருந்து தடுக்க

1. இஸ்ரேல் ஈரானிய அணு ஆய்வு நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.
2. அமெரிக்கா, ஈரானிய அணு ஆய்வு நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.
3. இரு நாடுகளும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.

ஒபாமா இதில் எதனையும் விரும்பவில்லை. இது அமெரிக்காவின் மிக நெருக்கமாக மிக நீண்டகால நட்பு நாடுகளாக இருக்கும் இஸ்ரேலையும் சவுதி அரேபியாவையும் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கியது. ஈரானுடனான பேச்சு வார்த்தையை விரும்பாதவர்கள் இந்தப் பேச்சு வார்த்தையை கரடியுடன் நடனமாடுவதற்கு ஒப்பிட்டனர். ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பிரச்சினை இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொடரும் என அவர்கள் எச்சரித்திருந்தனர். ஈரானுடனான பிரச்சினை வெறும் யூரேனியம் பதப்படுத்தல் பிரச்சனை மட்டுமல்ல. ஈரானின் ஆதரவுடன் செயற்படும் தீவிரவாதக் குழுக்கள் உலக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தல்கள் எனவும் அவர்கள் எச்சரித்தார்கள்.

ஈரானுடனான உடன்பாட்டில் இஸ்ரேலின் இருப்பு உரிமையை ஈரான் அங்கீகரிக்க வேண்டும் என இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாஹு வலியுறுத்தி இருந்தார். அது பற்றி ஈரானுடன் எந்த உடன்பாடும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஈரானியப் படைத்தளபதி இஸ்ரேலை அழிப்பது தொடர்பாகவோ இஸ்ரேலைத் தப்பவைப்பது தொடர்பாகவோ பேச முடியாது எனச் சூளுரைத்திருந்தார்.

### உளவு பார்த்த இஸ்ரேல்


ஈரானுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக சவுதி அரேபியாவுக்கு இரகசியமாகத் தகவல்கள் வழங்கிக் கொண்டிருந்த வேளையில் இஸ்ரேலுக்கு அப்படித் தகவல் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் இஸ்ரேல் தனது

(22ஆம் பக்கம் பார்க்க)

> **பேச்சுவார்த்தை என்பது வலியவர்கள் கொடுப்பதை மட்டும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதுமல்ல; வலியவர் என்னை நீ நம்புகிறாயா எனக் கேட்கும் போது மற்றவர்கள் மாடு போல் தலையாட்டுவதுமல்ல என்பதை தமிழர்களின் தலைவர்கள் எனத் தம்மைச் சொல்லுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செயற்கை இனிப்புகளை உபயோகிக்கலாமா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

அருகில் இருந்தவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தொழில் சார் அமைப்பின் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

பெரும்பாலானவர்கள் சீனி போடமல் தேநீர் குடித்தார்கள். ஒரு சிலர் ஒரு கரண்டி மட்டும் போட்டார்கள். இவர் மட்டும் மூன்று கரண்டி சீனி போட்டு நாக்கைச் சப்புக்கொட்டினார்.

Sugar is an addiction என்பதற்கு இவர் ஓர் உதாரணம். இப்படிச் சீனி குடிப்பவருக்கு நீரிழிவு வந்தால் என்னவாகும். இனிப்பே சாப்பிடாமல் மாய்ந்து போவாரா?

### செயற்கை இனிப்புகள் வேண்டியதில்லை!

செயற்கை இனிப்புக்கள் கிடைக்கின்றனவே! அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாமா?

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையானது acesulfame potassium, aspartame, saccharin, sucralose, neotame, and advantame ஆகிய செயற்கை இனிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் பல இலங்கையிலும் கிடைக்கின்றன.

நீரிழிவாளர்களுக்கும், உடல் எடை அதிகரித்தவர்களுக்கும் நல்லதல்ல. காரணம் அதில் கலோரி வலு அதிகம். குருதிச் சீனியின் அளவையும் உடல் கொழுப்பையும் எடையையும் அதிகரிக்கும். அத்தகைய இனிப்புப் பிரியர்களின் தேவைகளை ஈடுசெய்யவே, கலோரி வலுக் குறைந்த இனிப்புகளான செயற்கை இனிப்புகள் சந்தைக்கு வந்தன.

இவற்றின் நன்மை என்னவெனில் கலோரி வலு குறைவாக இருக்கும் அதே வேளை அவற்றின் இனிப்புச் சுவையானது சீனியை விடப் பல மடங்கு அதிகமாகும். உதாரணமாக 30 மி.கி. அளவேயான aspartame 5 கிராம் அளவு சீனியின் இனிப்புச் சுவையைக் கொடுக்க வல்லது.

எனவே பல நோயாளர்கள் தாங்களாகவே அல்லது மருத்துவரின் ஆலோசனையுடன் அத்தகைய செயற்கை இனிப்புகளை உணவு மற்றும் நீராகாரம் போன்றவற்றில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

ஒரு கல்லில் இரு மாங்காய்கள். இனிப்புச் சுவையை உண்ண முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காது. நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா?

இந்த செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா என்பதுதான் பலரின் மனத்தை அரிக்கும் சந்தேகமாகும்.?

சில காலத்திற்கு முன் வந்த சில ஆய்வுகள் சிகப்பு சமிக்கை காட்டின.

கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கு இது ஆபத்தாக முடியலாம் என்றது ஒரு ஆய்வு. காலத்திற்கு முந்திய மகப்பேறு நிகழலாம் எனவும் அஞ்சப்பட்டது. சுண்டெலிகளில் செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது அதிகளவில் செயற்கை இனிப்புகளை உண்பதால் சுண்டெலிகளில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதுடன் நீரிழிவு தோன்றுவதற்கான சாத்தியமும் அதிகம் என்றது.

ஆயினும் இந்த ஆய்வுகள் மனிதர்களில் இதுவரை செய்து நிரூபிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு அதிகாரசபையானது (European Food Safety Authority) அத்தகைய இனிப்புகளின் பாதுகாப்புத்தன்மை பற்றிய ஒரு மீள் ஆய்வை ஆரம்பித்தது.

அதன் பலனாக சிகப்பு ஒளி மங்கத் தொடங்கியது.

### இனிப்பான முடிவுகள்

மேற்படி மீள்ஆய்வு இன்னமும் தொடர்கிறது என்றபோதும் அஸ்பார்டேம் (aspartame) என்ற செயற்கை இனிப்புப் பற்றிய அறிக்கை 2015 ஜனவரியில் வெளியிடப்பட்டுள்ளது. 40 mg அளவைத் தாண்டாத அஸ்பார்டேம் இனிப்பை உட்கொள்வதால் ஆபத்துகள் ஏதும் இல்லை என அது முடிவு கூறியுள்ளது.

பிரான்சில் செய்யப்பட்ட மற்றொரு (Agency for Food, Environmental and Occupational Health & Safety) ஆய்வும் பச்சை விளக்குக் காட்டியது.


செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால், இனிப்புச் சுவைக்கு பழக்கப்பட்டு அதனால் மேலும் மேலும் இனிப்புப் பண்டங்களைத் தேடி உண்ணும் பழக்கம் ஏற்படுவதும் இல்லை என்கிறது. அதாவது இனிப்பு சுவைக்கு அடிமையாவது (addiction) இல்லையாம். செயற்கை இனிப்புகளை குழந்தைப் பருவத்தில் உண்பவர்கள் வளரும்போதும் அதையே நாடுவார்கள் என்ற பரவலான கருத்திற்கு ஆதாரம் இல்லை என்று மேலும் சொல்கிறது.

எடையைக் குறைப்பதற்கு கலோரி வலுக் குறைந்த இத்தகைய செயற்கை இனிப்புகள் உதவும் எனப் பலரும் நம்புகிறார்கள். அதே நேரம் இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு எடை அதிகரிக்கும் என்கிறன சில ஆய்வுகள்.

### இது உண்மையா?

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது.

இந்தச் செயற்கை இனிப்புகள் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரித்து அதன் காரணமாக உடலில் இன்சுலின் சுரப்பதையும் அதிகரிக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாக நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தை செயற்கை இனிப்புகள் அதிகரிக்கின்றன என்கிறார்கள். ஆனால் அது தவறு என்கிறது பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வு. இந்தச் செயற்கை இனிப்புகள் நீரிழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்காது என்பது தெளிவாகிறது.




கர்ப்பணிகள் இவற்றை பாவிப்பதால் கருப்பையில் வளரும் சிசு குறை மாதத்தில் பிறப்பதற்கு அல்லது வேறு ஆபத்துகளை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை.

செயற்கை இனிப்புகள் நிணநீர் தொகுதியில் lymphoma எனப்படும் ஒரு வகைப் புற்று நோயை ஏற்படுத்தலாம் என முன்னர் ஓர் ஆய்வு கூறியது. ஆயினும் பிரான்ஸ் நாட்டின் மேற் கூறிய ஆய்வானது புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை எனச் சொல்கிறது.

இருந்தபோதும் இது பற்றி மேலும் ஆய்வு செய்வது நல்லது என்கிறது அதே பிரான்ஸ் அறிக்கை.

### இறுதியாக

இறுதியாகச் சொல்லக் கூடியது என்ன?

செயற்கை இனிப்புகளை உட்கொள்ளவதால் குறிபிடக் கூடிய நன்மைகள் இல்லை என்பதும் அதே நேரம் அவற்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இல்லை என்பதே ஐரோப்பிய மற்றும் பிரான்ஸ் அதிகார சபைகளின் பொதுவான சிபார்சாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே இது தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களைக் கூறலாம்.

எவரும் தயக்கமின்றிப் பாவிக்கக் கூடியளவு ஆரோக்கியமான உணவு என்று செயற்கை இனிப்புகளைச் சிபார்சு செய்வது இன்றைய நிலையில் முடியாது. ஏனெனில் அவற்றினால் ஆரோக்கியம் மேம்படும் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் இல்லை.

இருந்தபோதும் அதிகளவு மென்பானங்களை அல்லது பழச் சாறுகளை அருந்துபவர்கள் அவற்றைக் கைவிட்டு, பதிலாக வெறும் நீரை மட்டும் உட்கொள்ள முடியாத நிலையில் இருந்தால், அதற்கு மாற்றீடாக செயற்கை இனிப்புகள் அமையும். முக்கியமாக நீரிழிவாளர்களுக்கு இது கூடியளவு பொருத்தமாக இருக்கும். அவர்கள் சீனி அதிகம் உள்ள பானங்களை அருந்துவதைத் தவிர்த்து இத்தகைய செயற்கை இனிப்புகளைத் தமது உணவிலும் நீராகாரங்களிலும் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை.

சரி ஆரம்பத்தில் பேசியவரது விடயத்திற்கு வருவோம். இனிப்பிற்கு அடிமையான அவர் செயற்கை இனிப்புகளை உபயோகிப்பது அவசியமா?

நீரிழிவு நோயற்ற ஏனையவர்கள் இவற்றை உபயோகிப்பதில் எந்தவித நன்மையும் இருப்பதாக இது வரை அறியப்படவில்லை.

எனவே அவர் அதிகளவு சீனி சேர்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

அதேநேரம் செயற்கை இனிப்புகளை மாற்றீடு செய்வதில் எந்த நன்மையும் இருப்பதாகத் தெரியவில்லை.

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருந்து வென்ற...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உளவுத்துறையினரைப் பாவித்து லௌசான் நகரில் இருந்து தகவல்களைப் பெற்றது அம்பலமாகியது. இஸ்ரேல் உளவுத்துறை மூலம் திரட்டிய தகவல்களை தனக்கு வேண்டிய அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டது.

> ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் பிரான்ஸ் பலஸ்தீனத்தை ஒரு அரசாக அங்கீகரிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளது. இதை அமெரிக்கா தனது வீட்டோ எனப்படும் இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்வதாயின் லௌசான் நகரில் ஈரானுடன் செய்த உடன்பாட்டுக்கு எந்த முட்டுக்கட்டையும் இஸ்ரேல் செய்யக் கூடாது என நிபந்தனை இரகசியமாக விதிக்கபட்டிருந்தது.

**உடன் பாட்டின் முக்கிய அம்சங்கள்**

முதலாவது ஈரானிடம் இருக்கும் யூரேனியம் பதப்படுத்தும் சுழலும் உருளைகளை பெருமளவில் குறைக்க வேண்டும். தற்போது ஈரான் 19,000 சுழலும் உருளைகளை வைத்திருக்கின்றது. இவற்றை 6000 ஆகக் குறைக்க வேண்டும்.

இரண்டாவது ஈரான் அடுத்த 15 ஆண்டுகளுக்கு 3.67 சதவீதம் மட்டுமே யூரேனியத்தைப் பதப்படுத்த முடியும். இந்த அளவு குறைவான பதப்படுத்தலால் ஈரானால் அணுக்குண்டு தயாரிக்க முடியாது.

மூன்றாவது ஈரான் தன்னிடம் தற்போது இருக்கும் பதப்படுத்தப் பட்ட யூரேனியத்தை 98 சதவீதத்தால் குறைக்க வேண்டும். ஈரானிடம் தற்போது 10,000 கிலோ பதப்படுத்தப் பட்ட யூரேனியம் இருக்கின்றது இதை 300 கிலோவாகக் குறைக்க வேண்டும்.

நான்காவது ஈரான் தனது யூரேனியப் பதப்படுத்தலை நடான்ஸ் என்னும் நகரில் மட்டுமே செய்ய முடியும். அத்துடன் ஐ-ஆர்-1 எனப்படும் சுழலும் உருளைகளை மட்டுமே யூரேனியப் பதப்படுத்தலுக்குப் பாவிக்க முடியும். தற்போது ஈரான் ஐ-ஆர்-2 என்னும் சுழலும் உருளைகளை யூரேனியம் பதப் படுத்தப் பயன்படுத்துகின்றது. இதனால் விரைவாக யூரேனியத்தைப் பதப் படுத்த முடியும்.

ஐந்தாவது பன்னாட்டு அணுவலு முகவர்கள் ஈரானில் தமது தேடல்களையும் சோதனைகளையும் மேற்கொள்ள முடியும்.

ஆறவது அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஈரான் எந்த கனநீர் அணு உலைகளையும் உருவாக்கக் கூடாது.

ஏழாவது தான் இதுவரை பாவித்த அணு உலை எரிபொருட்களை மீள்பாவனைக்கு உட்படுத்தக் கூடாது.

லௌசானில் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து எப்போது ஈரான் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படும் என அறிவிக்கப்படவில்லை.

**அமெரிக்கா முட்டுக் கட்டை போடுமா?**

அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஈரானுடனான உடன்பாடு குறித்து மகிழ்ச்சி எங்கும் நிலவுகின்றது. ஆனால் ஒபாமாவுக்கு எதிர்கட்சியான குடியரசுக் கட்சியினரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அமெரிக்க நாடாளுமன்றத்தில் பல ஐயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க நாடாளுமன்றத்தின் மக்களவையில் ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை தொடர்பாக சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன. மக்களவை மீண்டும் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கலாம். ஆனால் அதை இரத்து செய்யும் அதிகாரம் அமெரிக்க அதிபருக்கு உண்டு. அமெரிக்க அதிபரின் இரத்தைச் செல்லுபடியற்றதாக்குவதற்கு நாடாளுமன்றத்தின் மக்களவையிலும் மூதவையிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் குடியரசுக் கட்சிக்கு அது இப்போது இல்லை. இதனால் குடியரசுக் கட்சியினரால் பெருமளவு முட்டுக்கட்டை போட முடியாது. அவர்களால் செய்யக் கூடிய ஒரே செயல் ஈரானுடனான பேச்சுவார்த்தைக்கான நிதி ஒதுக்கீட்டை முற்றாக இல்லாமல் செய்வது மட்டுமே.

**உடன் பாட்டின் தாற்பரியங்கள்**

சுவிஸ் நகரான லௌசானில் காணப்பட்ட உடன்பாடு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாஹு, இந்த உடன்பாடு ஈரான் அணுகுண்டு உருவாக்குவதைத் தடை செய்யாது மாறாக ஈரான் அணுக் குண்டு உற்பத்தி செய்வதற்கு வழிவகுக்கும் எனச் சொன்னார். ஈரானிடம் உள்ள எல்லா பதனிடப்பட்ட யூரேனியமும் அழிக்கப்படவேண்டும் என்றும் ஈரான் எந்த ஒரு யூரேனியப் பதப்படுத்தலையும் செய்வதைத் தடை செய்ய வேண்டும் என இஸ்ரேல் வலியுறுத்தி இருந்தது. ஆனால் பல இஸ்ரேலியப் படைத்துறை ஆய்வாளர்கள் உடன்பாடு எதிர்பார்த்ததிலும் பார்க்கச் சிறப்பானதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர். ஈரானுடன் எந்தவித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாமல் அதன் யூரேனியம் உற்பத்தி நிலையங்களைத் தாக்கி அழிக்க வேண்டும் என்று இஸ்ரேலில் உள்ள தீவிரவாதச் சிந்தனை உள்ளவர்கள் கருதினார்கள். இவர்கள் தோற்கடிக்கப் பட்டுவிட்டதாக ஈரானில் உள்ளவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.


**மகிழ்ச்சியில் ஈரான்**

ஈரானிய அதிபர் ஹசன் ரௌஹானி தாம் பேச்சுவார்த்தை மேசையில் வழங்கிய உறுதி மொழியைக் காப்பாற்றுவோம் என்றார். ஈரானில் சாதாரண மக்களில் இருந்து உச்சத் தலைவர் அயத்துல்லா அலி கொமெய்னி வரை அனைவரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அயத்துல்லா அலி கொமெய்னி இந்த உடன்பாட்டுக்கு சம்மதம் தெரிவிப்பாரா என்பது முதலில் சந்தேகத்திற்கு இடமானதாக இருந்தது. ஆனால் உடன்பாட்டால் ஈரான் மகிழ்ச்சியடைந்துள்ளது. ஈரானியர்கள் தெருவில் இறங்கி நடனமாடி தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினர். பராக் ஒபாமாவின் உடன்பாடு தொடர்பான உரையின் காணொலியை ஈரானிய அரச ஊடகங்கள் ஒளிபரப்புச் செய்தன. பராக் ஒபாமா அமெரிக்காவில் இருந்து கொண்டே காணொலி மூலமாக லௌசான் நகரில் உள்ள பேச்சுவார்த்தையில் பங்கு பற்றியவர்களுக்கு உரையாற்றினார். அவரின் உரையாற்றும் காணொலியுடன் நின்று ஈரானியப் பிரதிநிதிகள் தம்மைத்தாமே ஷெல்ஃபி படங்கள் எடுத்துக் கொண்டனர்.

லௌசான் நகரில் செய்யப்பட்டது உடன்பாடு மட்டுமே. அங்கு யாரும் எந்த ஒரு பத்திரத்திலும் கையொப்பமிடவில்லை. உடன்பாடு தொடர்பாக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட செய்திகளுக்கும் பார்சி மொழியில் வெளியிடப்பட்ட செய்திகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது. போர்டோ, இஸ்ஃப ஹன், நந்தாஸ், ஆரக் ஆகிய நகரங் களில் யூரேனியம் பதனிடும் நிலையங்களை ஈரான் வைத்துள்ளது. இதில் எந்த ஒன்றும் மூடப்படுவதாக உடன்பாட்டில் இல்லை.

**இஸ்ரேலுக்கு வைக்கப்பட்ட பொறி**

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் பிரான்ஸ் பலஸ்தீனத்தை ஒரு அரசாக அங்கீகரிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளது. இதை அமெரிக்கா தனது வீட்டோ எனப்படும் இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்வதாயின் லௌசான் நகரில் ஈரானுடன் செய்த உடன்பாட்டுக்கு எந்த முட்டுக் கட்டையும் இஸ்ரேல் செய்யக் கூடாது என நிபந்தனை இரகசியமாக விதிக்கபட்டிருந்தது. சவுதி அரேபியாவில் இருந்து பெருமளவு எதிர்ப்புக் கிளம்பவில்லை.



Cartoon : Mohmoud Tabrizi

FARS NEWS AGENCY

**எரிபொருள் விலை வீழ்ச்சியடையும்**

ஈரான் மீதான பொருளாதாரத் தடை விலக்கப்படுமிடத்து உலகில் எரிபொருள் விலை மேலும் வீழ்ச்சியடையவிருக்கின்றது. இது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் நன்மையளிக்கக் கூடியதாகும். ஆனால் எரிபொருள் விலை வீழ்ச்சி ரஷ்யாவுக்கு மேலும் அடியாகப் போகின்றது. இதை ஈடு செய்ய ரஷ்யா ஈரானுக்கு பெருமளவு படைக்கலன்களை விற்பனை செய்ய முயற்சிக்கலாம்.

**புவிசார் அரசியல் மாறுமா?**

லௌசான் நகர் உடன்பாட்டைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவு சீரடையலாம். இது மேற்காசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் புவிசார் அரசியலைத் தலைகீழாக மாற்றலாம். துருக்கி - ஈரான் - அமெரிக்க ஆகியவற்றின் முக்கூட்டு உறவு ஒன்று உருவாகும் சாத்தியம் உண்டு. இதன் மூலம் தற்போது உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கும் சிரியா, ஈராக், லெபனான், காசா நிலப்பரப்பு, யேமன் ஆகிய நாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பது ஐக்கிய அமெரிக்காவின் மாற்றுக் கொள்கைகளில் ஒன்றாக இருக்கின்றது. ஈரானுடன் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தி ஈரானில் உள்ள வலது சாரிகளையும் மேற்கு நாடுகள் சார்பானவர்களையும் ஊக்கப்படுத்துவதும் அமெரிக்காவின் ஒரு நோக்கமாக இருந்தது. 1979 இல் முறிந்து போன ஈரானிய அமெரிக்க உறவை மீண்டும் புதுப்பித்து வளைகுடாப் பிராந்தியத்தில் அமைதி பேணலில் ஈரானையும் ஒரு பங்காளியாக்கும் ஒபாமாவின் கனவு நிறைவேறுவதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது.

**ஆறாம் வல்லரசு யார்?**

ஈரானுடனான பேச்சுவார்த்தைகளில் ஐந்து வல்லரசு நாடுகளுடன் ஆறாவது நாடாக ஜேர்மனி இணைந்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதாயின் அதில் முதலிடம் ஜேர்மனிக்கா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது இந்தியா, ஜப்பான், பிரேசில், தென் ஆபிரிக்கா ஆகியவற்றின் வல்லரசுக் கனவைக் கலைக்கிறதா என்ற கேள்வியும் தொடர்கின்றது.

**அமெரிக்கக் குடியரசுத் தேர்தலும் ஈரானும்**

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல் ஏற்கனவே சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. குடியரசுக் கட்சியின் சார்பின் போட்டியிட முயல்பவர்கள் ஈரானுக்கு எதிரான தமது வீர வசனங்களை இனி மேலும் முறுக்கேற்றிப் பேச வாய்ப்புண்டு. ஒபாமாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தாக்கிப் பேசிவரும் குடியரசுக் கட்சியினர் தமது தாக்குதலை மேலும் அதிகரிப்பர். மக்களாட்சிக் கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் ஹிலரி கிளிண்டனுக்கு அமெரிக்காவின் மிதவாதிகளிடமிருந்து ஆதரவு பெருக வாய்ப்புண்டு.

இஸ்ரேலின் மூன்று முக்கிய நிபந்தனைகளான இஸ்ரேலின் இருப்பை ஈரான் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஈரானின் பதப்படுத்தப்பட்ட யூரேனியம் முற்றாக அழிக்கப்படவேண்டும், ஈரான் எந்த ஒரு யூரேனியம் பதப்படுத்தலையும் செய்யக் கூடாது ஆகியவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இஸ்ரேலைத் தோற்கடிக்கும் எதுவும் ஈரானியர்களுக்கு வெற்றியே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மாக் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால் 2015 ஏப்ரல் 22ஆம் திகதி வெளியிடப்படுகிறது.